நேத்திரா லோகத் தைலம



இக் கூந்தல் தைலமானது 100 ஆண்டு காலம் இலங்கை மக்களால் மாத்திரமின்றி உலக மக்களாலும் பாவிக்கப்படும் அரும் பெரும் தைலமாகும். தலை சம்பந்தப்பட்ட சகல பிணிகளுக்கும் நல்ல நிவாரணி!
¼ போத்தல் ரூபா 21-50. ½ போத்தல் ரூ 42-50 தபாற் செலவு ரூபா 9-00 வி பி பி உண்டு.

கலாநிதி டபிள்யூ கே ஜினதாஸ
161, ஒல்கொட் மாவத்தை. கொழும்பு-11.
தொ பே 25095



அரசாங்கப் பத்திரிகையாக பதிவு பெற்றது

# தினபதி

ரூ 3/50

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல 6557 1990 ஏப்ரல் 5 'வியாழக்கிழமை' ★ ★ ★ தினபதி



கஸ்தூரி கல்பயோக



100 ஆண்டுகளாக பிரபல்யம் பெற்றது! கல்பயோகய நரம்புத் தளர்ச்சி, உற்சாகமின்மையை நீக்கி சக்தியைத் தரவல்லது. வாதம், சிறுநீர் வியாதிகளையும் குணமாக்கும் வைத்தியம். ஆண் பெண், குழந்தைகள் அனைவருக்கும் ஏற்றது.
விலை 40/- தபாற் செலவு 5/75

கலாநிதி டபிள்யூ கே ஜினதாஸ
161, ஒல்கொட் மாவத்தை. கொழும்பு-11.
தொ பே 25095


சமாதான சகவாழ்வே எமது இலட்சியம்

# வடக்கு கிழக்கு பிரச்சினைகளுக்கு சகலரும் திருப்தி அடையும் தீர்வு காண்போம்

## நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி

கொழும்பு, ஏப்ரல் 4

வடக்கு கிழக்கு பிரச்சினைகள் சிக்கலானவை. மக்களின அபிலாஷைகளுக்குத் தடையாக இல்லாமலும், எமது சமாதான சக வாழ்வுக்கு கொள்கைக்கு தீங்கு நேராமலும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடனும் அனைவரும் திருப்திப்படக்கூடிய விதத்தில் வடக்கு கிழக்கு பிரச்சினைகளுக்கு தீர்வு காண்போம். அதற்காகவே எல்லோருடனும் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறேன்.


மேற்கண்டவாறு ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச நேற்று நாடாளுமன்றத்தில் கூறினார்.

இரண்டாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடரின் முதலாவது அமர்வை ஜனாதிபதி நேற்று வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்து உரையாற்றினார்.

அவர் தாம நிகழ்த்திய அரசாங்கக் கொள்கை விளக்க உரையில் மேலும கூறியதாவது:-

1989 ஜனவரி மாதத்தில் நான் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிலைமை அதிவிரைவாகச் சீரடையத் தொடங்கியதென் பது உறுப்பினர்களுக்குத் தெரியும.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் சேர



2 ஆவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடரின் அங்குரார்ப்பண வைபவத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச முப்படைகளின் அணிவகுப்பை ஏற்றுக் கொள்வதைப் படத்தில் காண்க சபாநாயகர் எம எச் முகமமது, நாடாளுமன்ற பொதுச் செயலாளர் திரு நிஹால் செனவிரத்ன ஆகியோரும படத்தில் காணப் படுகின்றனர்- (எ*த)

## கல்முனை வங்கி: அடகு நகைகளை மீட்கலாம்

கல்முனை ஏப் 3

காரைதீவு மக்கள் வங்கி கிளையில் அடகு வைக்கப் பட்ட நகைகள் மீளக் கையளிக்கப்படும-

இன்று5 ஆம, நாளை 6 ஆம திகதிகளிலேயே இவை மீளக் கையளிக்கப்படும-

28-6-89க்கு முன் பணம

(2 ஆம பக்கம பார்க்க)

## கிழக்கில் நேற்று டீசல் தட்டுப்பாடு

மட்டக்களப்பு ஏப் 4

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் நேற்று டீசல் எண்ணெய்க்குப் பெருந் தட்டுப்பாடு நிலவியது-

இதனால் போக்குவரத்துச் சேவைகள் சீர்குலைந்தன- விவசாயிகள் பாதிப்படைந்தனர்-

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு மாத்திரம வாரம 4 லட்சத்து 20 ஆயிரம லீட்டர் டீசல்

(2 ஆம பக்கம பார்க்க)

## நாடாளுமன்ற அமர்வு

## இடுகிடுபள்ளத்தில் அம்புலன்ஸ் பாய்ந்தது

## மே தினத்தை ஐ. தே. க. சிறப்பாகக் கொண்டாடும்

# நாடாளுமன்ற ...
# நேற்று அங்குரார்ப்பணம்

கொழும்பு, ஏப் 4

ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச நேற்று பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இரண்டாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடரின் முதலாவது அமர்வை வைபவ ரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்-

இந்த வைபவத்தை பிரதான எதிர்க்கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஐக்கிய சோஷலிச முன்னணி ஆகிய மூன்று கட்சிகளும் பகிஷ்கரித்தன-

அதேவேளை தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழவர் ஜனநாயக முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்-

முன்னாள் சிரேஷ்ட அமைச்சர்களுள் ஒருவரான திரு காமினி திசாநாயக்காவுக்கு கடைசி வரிசையில் கடைசி ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்தது-

பல பின் வரிசை உறுப்பினர்கள் முன்னுக்கு தள்ளப்பட்டிருந்தனர்-

நாடாளுமன்றத்தின் உள்ளும

(2 ஆம் பக்கம் பார்க்க)

இயக்கத்தினர் ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் சேர இணங்கியுள்ளனர்.

1989 ஜூன் மாதத்தில் அரசாங்கத்துக்கும வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும மக்களுக்கும சுருங்கக் கூறின் இலங்கை அனைத்திலும வாழுகின்ற மக்களுக்கும எதிரான போர் நடவடிக்கைகளை நிறுத்தம செய்வ

(2 ஆம் பக்கம் பார்க்க)

# மா. சபைகளின்
## பிரச்சினைகள் குறித்து
## ஆராய அதிகாரிகள் குழுக்கள்

கொழும்பு, ஏப் 4

மாகாண சபைகள் எதிர் நோக்கும பிரச்சினைகள் குறித்து ஆராய அதிகாரிகள் குழுக்கள் அமைக்கப்படும.

மேற்படி குழுக்கள் அந்தந்த மாகாணங்களுக்கு நேரடியாகச் சென்று நிலைமைகளைக் கண்டறியும.

(2 ஆம பக்கம பார்க்க)

## சோமண்ணை



நூலைப் போலை சிலையைப் போலை பிள்ளை எண்டு சொல்லுவினமாக்கும-

# அம்புலன்ஸ் பாய்ந்தது
## கர்ப்பிணி உட்பட 6 பேர் படுகாயம்

கொழும்பு, ஏப் 4

வெலிமடையில் இருந்து பதுளை ஆஸ்பத்திரிக்கு இரண்டு நோயாளர்களை ஏற்றிச் சென்ற அமபுலன்ஸ் ஒன்று வேல்வல எனும இடத்தில் வைத்து 400 அடி கிடுகிடு பள்ளத்தில் பாய்ந்தது விபத்துக்குள்ளானது.

நேற்று முன்தினம இந்தச் சமபவம நடந்தது.

இதனால் அமபுலன்ஸில் கொண்டு செல்லப்பட்ட கர்ப்பிணிப் பெண் உட்பட ஆறுபேர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் உடனடியாக பதுளை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர், இவர்களுள் மூவரின் நிலை மிகவும கவலைக்கிடமாக இருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆஸ்பத்திரியில் சேர்க்கப்

(2 ஆம பக்கம பார்க்க)

# எயிட்ஸ் பெண்ணின்
## குழந்தைக்கும் எயிட்ஸா?
### டாக்டர்கள் பரிசோதனை

கொழும்பு, ஏப் 4

எயிட்ஸ் நோயால் பீடிக்கப்பட்டிருந்த பெண்மணி பிரசவித்த குழந்தையும பிரஸ்தாப நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து டாக்டர்கள் பரிசோதனைகளை நடத்தி வருகின்றனர்.

பிரஸ்தாப குழந்தை தேகாரோக்கியத்துடன் காணப்படுகிறது,

குழந்தைக்குத் தேவையான பால் ஆஸ்பத்திரியிலேயே வழங்கப்படுவதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

(ல-ர)

கொழும்பு ஏப் 4

ஐ தே கட்சி இவ்வருடம மே தினத்தை மிகச் சிறப்பாக கொண்டாடும-

சுமார் 13 வருட கால இடைவெளியின் பின்னர் கட்சி இம முறை பெரிய ஊர்வலம ஒன்றையும நடத்தும-

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் அமைச்சு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது-

அமைச்சர் திரு பெஸ்டஸ்

(2 ஆம பக்கம பார்க்க)

## நோன்பு தொழுகை நேரங்கள்

| | |
|---|---|
| ஸஹ்ர் முடிவு | — 4-3[illegible] |
| ஸுபஹ் | — 4-47 |
| சூரிய உதயம | — 6-07 |
| ளுஹர் | — 12-20 |
| அஸர் | — 3-19 |
| மஃரிபு | — 6-21 |
| இஷா | — 7-41 |

# மொனராகலை பகுதி
## ஜே.வி.பி. தலைவர்
## சுட்டுக் கொல்லப்பட்டார்

கொழும்பு, ஏப் 4

மொனராகலை பிரதேச ஜே வி பி தலைவர் சித்தி சோம இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்

எத்தகடுவ என்ற காட்டுப் பகுதியின் ஒளிவிடத்தில் வைத்து கடந்த செவ்வாயன்று இவர் சுட்டுக் கொல்லப்பட்டார்-

இதேவேளை நாடளாவிய ரீதியில் மேற்கொண்ட தேடுதல் வேட்டைகளில் 21 தீவிரவாத

(2 ஆம பக்கம பார்க்க)

## அமைதிப்படை விவகாரம்:
# கருணாநிதியை
## பதவி விலக்க வேண்டும்
### — சுப்ரமணிய சுவாமி

சென்னை ஏப் 4

இந்திய இராணுவத்திற்கு உரிய கௌரவம அளிக்க தமிழக முதல்வர் தவறி விட்டார், அவரை அரசமைப்பின் 356 ஆவது விதியின் கீழ் பதவி விலக்க வேண்டும.

இவ்வாறு ஜனதா கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி செய்தியாளர்களிடம தெரிவித்தார்.

அவர் மேலும கூறியதாவது-

"இந்திய அமைதி காக்கும படைக்கு எதிராக தமிழக முதல்

(2 ஆம பக்கம பார்க்க)

# களுத்துறை காட்டில்
# தீவிரவாத முகாம் அழிப்பு

கொழும்பு, ஏப் 4

பல வன்முறைச சமபவங்களிலும கொள்ளைகளிலும ஈடுபட்டு வந்த தென்னிலங்கைத் தீவிரவாதிகளின் முகாம ஒன்றை இராணுவத்தினரும பொலீஸாரும இணைந்து அழித்தனர், களுத்துறைக் காட்டில் இமமுகாம இயங்கி வந்தது.

தேசப்பிரேமி இயக்கத்தினரின் இந்த முகாம சுற்றி வளைக்கப்பட்ட போது அங்கு சிறை வைக்கப்பட்டிருந்த இரண்டு ரிசர்வ் பொலீஸாரில் ஒருவர் படையினரால் மீட்கப்பட்டார், மற்றவர் ஏற்கனவே கொல்லப்பட்டு விட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

படையினருக்கும தீவிரவாதிகளுக்கும இடையிலான மோதலில் முகாம பொறுப்பாளர் சுட்டுக் கொல்லப்பட்டார்,

(2 ஆம பக்கம பார்க்க)

**ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி**

# சட்ட தாமதத்தால் காப்புறுதி பணம் பெறுவதில் சிரமம்

கொழும்பு, ஏப் 4

ஆயுள் காப்புறுதி பணத்தைப் பெறுவதில் காணப்படும் நடைமுறைச் சிக்கல்களை நீக்கும் வகையில் அறிமுகப் படுத்தவிருந்த சட்டம தாமதத்துக்குள்ளாகி இருப்பதால் இக்காப்புறுதிப் பணத்தை பெறவிருப்போர் பெரும சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இருபதாயிரம ரூபாவுக்கும அதிகமான தொகை ஆயுட் காப்புறுதியாக, உரியவருக்கு வழங்கப்பட வேண்டுமானால் நீதிமன்றத்தில் சொத்துரிமை வழக்கு தொடரப்பட வேண்டும என்பது இன்றைய நடைமுறையாகும.

ஆனால் புதிய சட்டம அமுலுக்கு வந்ததும இவ்வாறான நடைமுறைகளைப் பின்பற்றாமலேயே காப்புறுதியை உரியவருக்கு வழங்க முடியும, அதற்கான அதிகாரம காப்புறுதி நிறுவனங்களுக்கு வழங்கப் பட்டு விடும.

ஆனால் இச்சட்டம அமுலாவதில் தாமதம காட்டப்படுவதால் ஆயுள் காப்புறுதியாக வழங்கப்பட வேண்டிய பல லட்சம ரூபா பணம உரியவர்களிடம ஒப்படைக்கப்படாமல் தேக்கி வைக்கப்பட்டுள்ளது.

இச்சட்டம அமுலுக்கு வந்ததும, சிக்கல்களின்றி காப்புறுதி தொகைகளை உரியவர்களிடம கொடுத்து விடலாம, இந்த எண்ணத்துடன் பணம தேக்கி வைக்கப்பட்டிருந்தாலும, இத்தாமதம காரணமாக சமபந்தப்பட்டோர் சிரமங்களுக்கு ஆளாகி உள்ளனர் எனக் கூறப்படுகிறது.

(இ-032)

## பதுளையில் சிமெந்து தூண் தயாரிக்கும் தொழிற்சாலை

பதுளை, ஏப் 3

கிராம மின்சார திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பதுளையில சிமெந்துத் தூண்கள் தயாரிக்கும தொழிற்சாலையொன்று ஆரமபிக்கப்படவுள்ளது.

ஊவா மாகாண ஆளுநர் திரு திலக் ரட்னாயக்க காரியாலயத்தில் அண்மையில் விசேட கூட்டமொன்று நடைபெற்றது. இதில் வைத்து இத் தகவல் வெளியிடப் பட்டது.

சிமெந்துத் தூண்களை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளதாக தெரிவிந்தபோதே திரு ரட்னாயக்க பதுளையில் ஒரு தொழிற்சாலையை ஆரமபிப் போம என ஆலோசனை கூறினார்.

இளைஞர்களைப் பயிற்சியில் ஈடுபடுத்துவதால் மிகக் குறைந்த செலவில் சிமெந்துத் தூண் செய்ய முடியும என அவர் கூறினார்.

[இ-037]

## கிழக்கில்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

தேவைப்படுவதாக மட்டக் களப்பு பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் முகாமையாளர் திரு நா திருநாவுக்கரசு தினபதிக்குத் தெரிவித்தார்.

எனினும கொழுமபிலிருந்து ரயில் மார்க்கமாக வாரம 1 லட்சம லீட்டர் டீசல் மாத்திரமே அனுப்பி வைக்கப்படுகிறது. இதனாலேயே அடிக்கடி டீசல் தட்டுப்பாடு ஏற்படுவதாகவும திரு திருநாவுக்கரசு கூறினார்.

(ல—ந—த)

## இடுகிடு பள்ளத்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

பட்ட சிறித நேரத்தில் பிரஸ்தாப கர்ப்பிணிப் பெண் குழநதை ஒன்றைப் பிரசவித்தார்.

இரண்டு நோயாளர்கள், ஆஸ்பத்திரி ஊழியர்கள் மூவர், அமபுலன்ஸ் சாரதி ஆகியோரே இவ்விபத்தில் காயமடைந்தவர்கள்.

(ல-ர)

## ...ஊந்துறை...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

இங்கிருந்த சுமார் 15 அல்லது 20 தீவிரவாதிகள் முகாமைக் கைவிட்டு தப்பிச் சென்றனர், படையினர் பதுக்கும அதிகமான தன்னியக்க ஆயுதங்களை இங்கிருந்து கைப்பற்றினர்.

... அங்கிருந்த கைப்பற்றினர். ... இருந்த பொலீஸார் இருவரும் ... கடந்த பெப்ரவரி நடுப் பகுதியில் கடத்தப்பட்டவர்களாவர்,

தப்பிச் சென்ற தீவிரவாதிகள் இயக்கத்தில் தீவிரமாக ... கொண்டவர்கள், ... கிராமங்களில் இவர்கள் ... முயற்சிக்கையில் இவர்களை ஆடையாளம கண்டு கைது செய்ய முடியும என ... பொலீஸ் ... உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் நமபிக்கை தெரிவித்தார்,

(ல-032)

## கல்முனைவங்கி...

(1 அம பக்கத் தொடர்ச்சி)

செலுத்திய அனைவருக்கும நகைகள் மீள் கையளிக்கப்படும.

கல்முனை மக்கள் வங்கிக் கிளையில் வைத்தே மேற்படி நகைகள் கையளிக்கப்பட இருக்கின்றன. இதற்கான அறிவுறுத்தல் கடிதங்கள் அவரவர் முகவரியிடப்பட்டு நகை உரிமையாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

நகைகளை பெற வருவோர் தமமுடன் பின்வரும ஆவணங்களைக் கொண்டுவர வேண்டுமென வேண்டப்படுகின்றனர்.

... அனுப்பப்பட்ட ...

# வடக்கு கிழக்கு பிரச்சினை...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

தாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் பகிரங்கப் பிரகடனம ஒன்றினைச் செய்தார்கள்.

வடக்கிலும கிழக்கிலும உள்ள பிரச்சினைகள் மிகவும சிக்கல் வாய்ந்தவைகளாகும.

சமபந்தப்பட்டவர்கள் யாவரும திருப்தியடையக் கூடிய முறையில் அப்பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும.

அப்பிரச்சினைகள் விட்டுக் கொடுக்கும மனப்பான்மையுடன் தீர்க்கப்படல் வேண்டும.

பொது மக்களது மறுக்க முடியாத அபிலாசைகளுக்குத் தடையாக நாங்கள் செயற்படக் கூடாது.

நாம அடைய விருமபும குறிக்கோளான சமாதான சகவாழ்வுக்கு தீங்கு ஏற்படக் கூடியவாறு ஐயத்துக்கும அச்சத்துக்கும தவறான எண்ணங்களுக்கும நாங்கள் இடம கொடுத்தல் ஆகாது.

இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும நோக்கில் எல்லாக் கட்சிகளை ஆளுங் கட்சியினரோடு மட்டுமல்லாமல் நம நாட்டு சனநாயக முறைமைகளையும அமைப்புகளையும பாதுகாத்து நாட்டில் சகஜ நிலையினை ஏற்படுத்துவதற்கு பலவாறு பணிபுரிந்த ஏனைய கட்சிகளோடும குழுக்களோடும நமது நாட்டிலுள்ள மக்கள் அனைவரோடும பகிர்ந்து கொள்ள நான் விருமபுகின்றேன்.

அபிவிருத்திக்காகவே அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வது எனது அரசாங்கத்தின் நோக்கமல்ல.

சிறுபான்மைகள் கொண்ட சிலர் மாத்திரம அபிவிருத்தி வேலைகளின் நற்பயன்களைப் பெறும நிலை மாறி நாட்டு மக்கள் அனைவரும அப்பயன்களைப் பெறுதல் வேண்டும. நீதியும நியாயமும சமத்துவமும சிறந்து விளங்கும சமுதாயம ஒன்றைக் கட்டி எழுப்புவதற்கு முயல்வோமாக.

இப்படி ஜனாதிபதி கூறினார்.

ஜனாதிபதி தமது உரையில்

* சர்வகட்சி மாநாட்டுப் பிரதிநிதிகள் குழு இப்போது 20 பலதரப்பட்ட விஷயங்கள் பற்றி ஆராய்ந்து வருகிறது. சட்டம இயற்றுவதற்கு முன்னோடி நடவடிக்கை இது.

இளைஞர் விவகாரங்கள் பற்றி ஆராய்ந்த குழுவின் சிபார்சுகள் நடைமுறைப்படுத்தப் படும.

* புதிய கைத்தொழில் முயற்சிகளுக்கு அரசாங்கம ஊக்கம அளிக்கும. நவீன கைத்தொழில் திட்டநகல் ஒன்று தயாரிக்கப்பட்டு இருக்கிறது. அதில் அடங்கியுள்ள பல ஆலோசனைகள் நடைமுறைப் படுத்தப்படும.

* கூட்டுத்தாபனங்கள், அரசாங்கம பொறுப்பேற்ற வர்த்தக நிறுவனங்கள் ஆகியவை மக்கள் மயப் படுத்தப்பட்டு வருகின்றன. மக்கள் மயமாக்குவதன் மூலம தொழிலாளர்களின் உரிமைகளும சலுகைகளும நன்கு பாதுகாக்கப்படும.

* வறுமை ஒழிப்புத் திட்டத்

# நாடாளுமன்ற...

... முழுப் பலத்த பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

நாடாளுமன்ற புற வீதியும பிரதான வீதியும தேசியக் கொடிகளினாலும மாகாண, மாவட்டக் கொடிகளினாலும அலங்கரிக்கப் பட்டிருந்தன.

நாடாளுமன்ற பிரதான வீதியில முப்படை வீரர்கள் அணி வகுத்து நின்றனர்.

நாடாளுமன்றத்திற்கு வருகை தந்த ஜனாதிபதிக்கு செங்கமபள வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஜனாதிபதியை பிரதமர், சபாநாயகர், நாடாளுமன்ற செயலாளர் நாயகம ஆகியோர் வரவேற்றனர்.

நாடாளுமன்ற முன்றலில் விமானப்படை வீராங்கனைகள் தேசிய கீதமிசைக்க முப்படை வீரர்கள் மரியாதை அணிவகுப்பு ஒன்றை நடத்தினர்.

இதனைத் தொடர்ந்து படைக் குல சேவிதர் செங்கோல் ஏந்தி முன்னே வர ஜனாதிபதியும சபாநாயகரும வந்து தமது ஆசனங்களில் அமர்ந்தனர்.

நாடாளுமன்றத்தின் பார்வையாளர் கலரியிலும சபாநாயகர் கலரியிலும வெளிநாட்டுத் தூதர்களும விசேட விருந்தினர்களும நிறைந்திருந்தனர்.

சரியாக 9-50 க்கு ஜனாதிபதி தனது கொள்கைத் திட்ட உரையை ஆரமபித்து 10-50 க்கு நிறைவு செய்தார்.

சிங்களத்தில் ஆற்றிய ஜனாதிபதியின் உரை தமிழிலும ஆங்கிலத்திலும சமகாலத்தில் மொழி பெயர்க்கப்பட்டன.

ஜனாதிபதியின் உரையைத் தொடர்ந்து சபை முதல்வர் நாடாளுமன்றத்தை 5 ஆம திகதி காலை 9 மணிவரை ஒத்திவைப்பதற்கான பிரேரணையை சமர்ப்பித்தார்.

இதனைத் தொடர்ந்து நாடாளுமன்றம இன்று காலை 9-00 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டது.

[ல—ய]

## கருணாநிதியை...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

வர் கருத்து வெளியிட்டுள்ளார். அவர் அதை வாபஸ் பெறவில்லை, இதன் மூலம இந்திய இராணுவத்திற்கு உரிய கௌரவம அளிக்க அவர் தவறி விட்டார். அரசமைப்பின் 356 ஆவது விதியின் கீழ் அவரை பதவி விலக்க முடியும" என்று கூறிய அவர் ஜனாதிபதியைச் சந்தித்து திரு கருணாநிதியை விலக்கும கோரிக்கையை விடுக்கவிருப்பதாகவும கூறினார்.

இந்தியப் படைக்கு எதிராக தாம எதுவும கூறவில்லை என்று பின்னர் கருணாநிதி கூறி இருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது,

# கொழும்பில் சர்வதேச புத்தக கண்காட்சி

கொழுமபு, ஏப் 4

சர்வதேச புத்தகக் கண்காட்சியொன்று எதிர்வரும ஏழாம திகதி முதல் 10 ஆம திகதிவரை கொழுமபு பொது நூலகத்தில் நடைபெறும.

உலக சுகாதார தினத்தை முன்னிட்டு இலங்கை இளைஞர் பவுண்டேஷனும உலக சுகாதார அமைப்பின் இலங்கைக் கிளையும கூட்டிணைந்து இக் கண்காட்சியை ஒழுங்கு செய்துள்ளன.

எமது உலகமும எமது சுகாதாரமும என்ற தலைப்பிலான மேற்படி கண்காட்சியில் உலக சுகாதார ஸ்தாபனம, ஐக்கிய நாடுகள் தகவல் நிலையம, ஆசியா பவுண்டேஷன், லண்டன் பல கலைக்கழகம ஆகியவற்றின் வெளியீடுகளும மற்றும பல்வேறு நாடுகளைச் சேர்ந்த புத்தகங்களும காட்சிக்கு வைக்கப் படும.

இங்கு சலுகை விலையில் புத்தகங்களை விற்பனை செய்யவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

[இ-032]

## திருமலை டிப்போவுக்கு டயர், டியூப், பற்றறிகள்

தமபலகாமம, ஏப் 3

வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் நளின் செனிவிரத்னாவின் அவசர வேண்டுகோளை அடுத்து போக்குவரத்து அமைச்சர் திரு வஜிர பாலமபேருமபுவ 3 லட்ச ரூபா பெறுமதியான டயர், டியூப் பற்றறி போன்றவற்றை திருமலை டிப்போவுக்கு வழங்கியிருக்கிறார்.

இவற்றைப் பெற்றதும 6 பஸ்கள் உடனடியாக சேவையில் ஈடுபடுத்தப்படும.

இரண்டாவது தடவையாக ஆளுநர் அண்மையில் திருமலை டிப்போவுக்குச் சென்று அங்கு நிலவும குறைபாடுகளைக் கேட்டறிந்தார்.

கிழக்குப் பிரதேச போக்கு

பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

(இ-288)


# இன்றைய திரைகளில்

10 வது வாரம

கெப்பிட்டல்

(கொழும்பு)

கடைசி வாரம்

2-30 6-00, 9-30

லிடோ

(யாழ்நகர்)

மென வேண்டப்படுகின்றனர்—

வங்கியினால் அனுப்பப்பட்ட அறிவுறுத்தல் கடிதம்— ஏற்கனவே வங்கியில் ஒப்படைக்கப்பட்டிருந்தால் அடகுச் சீட்டு நகை மீளப் பெற பணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு, தேசிய அடையாள கார்டு ஆகியவை—

சுமார் 700 பேர் வரை இவ்விதம் அழைக்கப்பட்டுள்ளனர்— கடிதங்கள் கிடைக்கப் பெறாதோரும் 28–6–1989 இற்கு முன் பணம் செலுத்தி இருந்தால் அவர்களும் நகைகளை மீளப் பெற வருமாறு வேண்டப்படுகின்றனர்—

இத்தகவல்களை கல்முனை மக்கள் வங்கி முகாமையாளர் ஜனாப் தவான் காலித் மகமூத் தெரிவித்தார்— (ல—281)

## மொனராகலை...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்—

கமபுஹாவில் ஒரு அன்னாசித் தோட்டத்துக்கு மத்தியில் தீவிரவாதிகளின் ஒளிவிடம் ஒன்றை பொலீஸார் சுற்றி வளைத்த போது பெருமளவு ஆயுதங்களும் திருட்டுப் போன வாகனங்களும் சிக்கின— பொலீஸார் சுற்றி வளைத்தபோது இவ் வீடு கைவிடப்பட்ட நிலையில் காட்சியளிக்கது— இம் மாவட்டத்தின் ஜே வி பியினர் கூடாரத்தியிடமாக இது இயங்கி இருக்கிறது என பொலிஸ் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்—

ஒரு டி—56 ரைபிள்கள். ஒரு டி—84 இயந்திரத் துப்பாக்கி, ஒரு எஸ் எல் ஆர் ரகத் துப்பாக்கி, மூன்று ரிவால்வர்கள். அறு ரிபீட்டர்கள். 25 கைக்குண்டுகள் ஒரு உள்ளூர்த் துப்பாக்கி அகிய ஆயுதங்களும், ஒரு பிக்அப் லொறி. ஐந்து மோட்டார் சைக்கிள்கள் ஆகியனவும் இங்கு கைப்பற்றப்பட்டன— [வு—032]

(ல—032)

## மா. சபைகளுக்கு...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் அமைச்சர் திரு பெஸ்டஸ் பெரேரா இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

மாகாண சபைகள் எதிர் நோக்கும நிர்வாக, நிதி, ஊழியர்கள், மற்றும ஊழியர்களின் சமபளப் பரச்சினைகள் என்பன குறித்து இக்குழு நேரடியாக கண்டறியும. தக.

இது குறித்த அறிக்கைகளை சமர்ப்பிக்கும படியும இக்குழுவினர் கேட்கப்படுவர் என மேற்படி அமைச்சின் பேச்சாளர் ஒருவர் சொன்னார். (ல—ர)

## மே. தினத்தை...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

பெரேரா தலைமையில் இதற்கான விசேஷ கமிட்டி ஒன்றும நியமிக்கப்பட்டுள்ளது—

1977 ஆம ஆண்டிலேயே ஐ தே கட்சி தனது கடைசி மே தின ஊர்வலத்தை நடத்தியது—

இதையடுத்து கடந்த 13 ஆண்டு காலமாக மேதினக் கூட்டத்தை கலை நிகழ்ச்சிகளுடன் மாத்திரமே கட்சி நடத்தி வந்தது—

எனினும ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசவின் விசேஷ பணிப்புரையின் பேரில் இமமுறை ஊர்வலம நடத்த திர்மானிக்கப்பட்டுள்ளது—

ஐ தே கட்சி இமமுறை மே தினத்தன்று ஊர்வலம, பிரமாண்டமான பொதுக் கூட்டம என்பவற்றுடன் விசேஷ கலை நிகழ்ச்சிகளையும நடத்தும— (ல—ர)

இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும நோக்கில் எல்லாக் கட்சிகளோடும குழுமங்களோடும பிரிவுகளோடும சமவாதம மூலம கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருகின்றேன்.

இந்த முயற்சியின் வெற்றிக்காக பரஸ்பர நமபிக்கையினையும விசுவாசத்தினையும மீண்டும கட்டியெழுப்ப வேண்டும.

இலங்கையின் ஐக்கியத்தினையும இறைமையினையும ஆட்புல ஒருமையினையும பாதுகாப்பதற்கு ஒப்புரவானதும நீதி நியாயமானதும யாவராலும ஒப்புக் கொள்ளக் கூடியதுமான சிறந்த தீர்வினைக் காணக் கூடிய ஒரே வழி இதுவாகும.

எல்லாக் கட்சிகளும குழுமங்களும பிரிவுகளும தகவல் ஊடகங்களும தமது அற்பமான அரசியல் நலன்களைப் பாதுகாக்கும நோக்கில் தடைகளை உண்டாக்காமல் இச் சீரிய நோக்கத்தின் வெற்றிக்காக அனுகூலத்துடனும புரிந்துணர்வுடனும செயற்படுவார்கள் என நான் நமபுகிறேன்.

உறுதியான தேசிய ஐக்கியத்திற்காகவும தேசிய ஒருங்கிணைப்புக்காகவும அத்திவாரமிடக்கூடிய தேசிய ஒற்றுமையினை நிலை நாட்டுவதற்கு நமது மனதைப் பக்குவப்படுத்திக் கொள்ளும பணி நம எதிரே இருக்கின்றது.

அதற்கு எங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும. இதனைச் சாதிப்பதற்கு இன்றியமையாத அமைப்புகளைத் தாபிக்க அரசாங்கத்தினால் விரைவில் நடவடிக்கை எடுக்கப் படும.

கடந்த ஆண்டில் ஏற்பட்ட சோதனைகளுக்கும சவால்களுக்கும மத்தியில் நாங்கள் பல சாதனைகளைப் புரிந்துள்ளோம.

இந்தச் சாதனைகளால் நமக்குக் கிடைத்துள்ள பாராட்டுதல்

னார்.

ஜனாதிபதி தமது உரையில் குறிப்பிட்ட ஏனைய விஷயங்களின் சாரம வருமாறு:—

* நான் ஜனாதிபதிப் பதவி ஏற்ற காலத்தில் ஜனநாயகத்தின் அடித்தளத்துக்கே ஆபத்து ஏற்பட்டிருந்தது.
* அபிவிருத்தியைப் பின்போட்டு அச்சத்தை நீக்க வேண்டும என்று மக்கள் கோரினார்கள். நான் அதற்கு இணங்கினேன். அவசரகாலச் சட்டம மீண்டும அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.
* ஜனாதிபதி தேர்தலின் போதும பொதுத் தேர்தலின் போதும இந்தியப் படை வெளியேற்றப் படும என்று உறுதி அளித்தேன். மார்ச் 24 இல் இந்தியப் படை முற்றாக வெளியேறி விட்டது. புதிய இந்தியப் பிரதமர் விஸ்வநாத் பிரதாப் சிங்கிற்கும அவரது அரசிற்கும நன்றி கூறுகிறேன்.
* நாட்டு மக்களிடையே பயப் பிராந்தி இப்போது நீங்கி வருகிறது. அவசரகாலச் சட்டம கூடிய விரைவில் நீக்கப் படும.
* கிளர்ச்சி நடவடிக்கைகளால் அரச மற்றும தனியார் துறையில் ஏற்பட்ட உற்பத்தி நட்டம ரூபா 320 கோடி. பொருள்கள் சேவைகளுக்கு ஏற்பட்ட நட்டம ரூபா 715 கோடி. நாட்டுப் பொருளாதாரத்துக்கு ஏற்பட்ட மொத்த நட்டம ரூபா 1035 கோடி. இதில் பாதுகாப்புச் செலவினம ரூபா 800 கோடி சேர்க்கப் படவில்லை. அரசாங்க வருமான இழப்பு ரூபா 500 கோடி.
* ஜனசக்தித் திட்டம வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது. இந்தத் திட்டம ஏழை மக்களின் நுகர்வுக்கும முதலீட்டுக்கும உதவுகிறது.

நன்கு பாதுகாக்கப்படும.

* வறுமை ஒழிப்புத் திட்டத்தின் ஓர் அமசமாக சுற்றுபுறச் சூழல் பாதுகாப்புக்கு அரசாங்கம முக்கியத்துவம அளிக்கும.
* அரசியல், சமூக, பொருளாதார, நிர்வாக முறைமைகளை அடியோடு மாற்றி அமைக்கும திட்டம ஒன்றினை அரசாங்கம நடைமுறைப்படுத்தி வருகிறது—
* அதிகாரத் துஷ்பிரயோகமும லஞ்ச ஊழலும ஒழிக்கப்படும என்று உறுதி அளிக்கிறேன்—
* நடமாடும ஜனாதிபதி செயலகச் சேவையால் மக்களின் பிரச்சினைகளை விரைவாக அந்த இடத்திலேயே தீர்க்கக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது— தவிரவும மக்கள் நலனுக்காக கிராம சேவகர் பிரிவுகள் 4500 இல் இருந்து 14570 ஆக இப்போது அதிகரிக்கப் பட்டிருக்கிறது—
* கல்வித்துறையில் விரைவில் பல சீர்திருத்தங்கள் செய்யப் படும— கடந்த வருடத்திலிருந்து 200 கோடி ரூபா செலவில் பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப் பட்டு வருகிறது—
* மறுவாழ்வு, மறுசீரமைப்புப் பணிகள் இப்போது நடைபெற்று வருகின்றன— அரசாங்கம இவற்றிற்கு முன்னுரிமை வழங்கும— வெளிநாடுகள் வாக்குறுதி அளித்துள்ள 50 கோடி அமெரிக்க டாலரையும பெறுவதற்கு ஒழுங்கு செய்யப் படும—

எல்லாக் கட்டங்களிலும எல்லா மட்டங்களிலும ஒழுங்கு, கட்டுப்பாடு பேணப்படும— அமைச்சர்களும சிரேஷ்ட அதிகாரிகளும முன்மாதிரி காட்டுவார்கள்—

ஜனநாயக அமைப்புகள் பலப் படுத்தப்படும— உள்ளூராட்சி

டுள்ளார்—

கிழக்குப் பிரதேச போக்குவரத்துச சபையின தலைவர் திரு மாகமட் அலி உட்பட பல உயர் அதிகாரிகள ஆளுநரிடம பல குறைபபாடுகளை எடுத்து கூறினர்.

டிப்போவில் மொத்தம 54 பஸ்கள உள்ளன, இவற்றுள் 14 பஸ்கள் உபயோகிக்க முடியாது ஒதுக்கப்பட்டுள்ளன.

22 பஸ்கள தறபோது சேவையில் ஈடுபடுத்தபபட்டுள்ளன.

18 பஸ்கள் பழுதடைந்துள்ளன. இவற்றுள் 6 பஸ்களுக்கு பற்றறி, டயர், டியூப் போனறவை மாத்திரமே தேவைப்படுகின்றன.

இவற்றைப் பெற்றால் 2 நாட்களுள் இந்த பஸ்களையும சேவையில ஈடுபடுத்த முடியுமெனவும அதிகாரிகள் சுட்டிக் காட்டினர்.

இதனையடுத்து ஆளுநர் உடனடியாக அமைச்சருடன் தொடர்பு கொண்டு 3 லட்சம ரூபா பெறுமதியான பற்றறி, டயர், டியூப போன்றவற்றைப்

மன்றத் தேர்தல்கள் இந்த வருடத்தில் நடத்தப்படும—

எல்லா சேவைவாய்ப்புகளும திறமையுள்ளவர்களுக்கு இன விகிதாசார அடிப்படையில் வழங்கப்படும— பாகுபாடு காட்டப்பட மாட்டாது— அரசியல் தலையீடுகளும இருக்க மாட்டா—

பொது தேசிய நலனையும சுய மரியாதையையும பாதுகாக்கும விதத்திலேயே எமது வெளிநாட்டுக் கொள்கை இருக்கும— வெளிநாடுகளின உதவி, உற்சாகம, ஊக்கம அனைத்தும வரவேற்கப படும— அதேவேளை எமது இறைமையையும சுதந்திரத்தையும பெருககும விட்டுக் கொடுக்க மாட்டோம—

(உ—ய—கு)


லிடோ
(யாழ்நகர்)
10–30, 2–00, 6–00

பிரபு · அமலா
சிறுவன் மீனுராஜ் நடித்த

பூ...
பூவா
பூத்திருக்கு
(கலர்)

17 வது வாரம
ராஜா
(யாழ்நகர்)
10–30, 2–30, 6–00
சாந்தி
(மட்டுநகர்)
10–30, 2–00, 6–00, 9–00
ரஜனிகாந்த்
(இரட்டை வேடம)
ராதா · நதியா
நடித்த

ராஜாதி ராஜா
(கலர்)

18 வது வாரம
வெலிங்டன்
(யாழ்நகர்)
10–30, 2–30, 6–00
கிங்ஸ்
(பதுளை)
10–30, 2–30, 6–00
நியூ ரொயல்
(இரத்தினபுரி)
10–30, 2–30, 6–00, 9–00
கார்த்திக் — குஷ்பு
வி கே ராமசாமி
நடித்த

வருஷம் 16
(கலர்)

# புகழ் இருக்கும் போதுதான் ஏராளம் நண்பர்கள் இருப்பார்கள்

## பேட்டியில் இளம் நடிகர் ராம்கி

"சின்னப் பூவே மெல்லப் பேசு" படத்தின் மூலம் அறிமுகமானவர் ராம்கி— அவரை பார்சன் பில்டிங்கில் சந்தித்தோம்—

இப்போது இளைஞர்கள் நிறைய சாதிக்கிறார்கள்— நீங்கள் சாதிக்க விரும்புவது என்ன?

இன்றைய காலகட்டத்தில் படங்கள் பல தினசரி தோன்றும் அளவிற்கு காலம் விரைவாக செல்கிறது— காலத்திற்குத் தகுந்தவாறு அவரவர் தாங்கள் சார்ந்துள்ள பணியில் கேமரா எடிட்டிங் டைரக்ஷன் துறைகளில் பல புதுமைகளை நிகழ்த்திக் கொண்டு இருக்கிறார்கள்—

நானும் நிறைய சாதிக்க வேண்டும் என்ற துடிப்புடன் இருந்தாலும் எனக்கு கிடைக்கும் வேடத்தை சிறப்புடன் செய்து நல்ல பெயர் எடுக்கவே விரும்புகிறேன்—

ராமகிருஷ்ணன் ராம்கி ஆனது எப்படி?

மதுரை அமெரிக்கன் கல்லூரியில் பயின்ற போது ராமகிருஷ்ணனாக இருந்து சென்னைக்கு வந்து சினிமாவில் நடிக்க வேண்டும்— நடிப்பைப் பற்றி முழுவதும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலில் திரைப்படக் கல்லூரி என்ற கடலில் நீந்தினேன்—

அப்போது ராமகிருஷ்ணன் என்ற பெயர் பெரியதாக இருப்பதால் ராபர்ட் — ராஜசேகரனின் "சின்னப் பூவே மெல்லப்பேசு" படத்தின் மூலம் ராம்கியாக மாறினேன்—

நீங்கள் பணம் அதிகம் கேட்பதாக ஒரு கருத்து நிலவுகிறதே?

அப்படியில்லை— எனக்கென்று சின்ன அளவுதான் கேட்பேன்— ஒரு நடிகருக்கு பெயரும் புகழும் இருக்கும் போது தான் பலர் நண்பர்களாக இருக்கிறார்கள்— பணம் இல்லையென்றால் பக்கத்தில் ஆள் இருக்க மாட்டார்கள்— இதை வார்த்தை அளவில் சொல்லாமல் அனுபவத்திலேயே கண்டு கொண்டேன்—

அதேபோல பத்திரிகை நண்பர்கள் கூட பிசியாக இருந்தால்தான் அவர்களைப் பார்த்தெழுதுவார்கள்— இல்லையென்றால் கண்டுகொள்ளவே மாட்டார்கள்— சினிமா உலகத்திலே நடிகர்களுக்கு மார்க்கட் ஒரு குறிப்பிட்ட காலம் வரைதான்— அதற்குள் பெயர் எடுக்க வேண்டும்—

சண்டை காதல் கற்பழிப்பு காட்சிகளில் நடிக்கும் போது



ராம்கி

காப்பாற்றுவது போல் காட்சிகள் நிறைய அமைகின்றன—

கம்பெனிகளைப் பொறுத்துத்தான் கால்ஷீட் தருவீர்களா?

நான் கம்பனிகளை பார்த்து சின்னது பெரியது என்று வித்தியாசம் பார்ப்பதில்லை— கிடைக்கும் வேடம் நன்றாக இருக்கிறதா? இந்தப் படத்தில் எப்படி நடிக்க வேண்டும்— மாறுபட்டு நடித்தால் நன்றாக இருக்குமா? என்பதை மட்டுமே யூகித்து நடிப்பேன்— சின்னக் கம்பெனிகள்தான் படிப்படியாக— வளர்ந்து உச்ச நிலைக்கு செல்கின்றன— நடிகர்களுக்கு வேடங்கள்தான் முக்கியமே தவிர கம்பெனிகள் அல்ல!

நீங்கள் நடிப்பைத் தேர்ந்தெடுத்தது ஏன்?

நடிக்க வேண்டும் என்ற ஆர்வம் வந்ததால் முறைப்படி இன்ஸ்டியூட்டில் பயின்று ஆரம்பம் முதல் திரை உலகம் எப்படி இருந்தது என்பதைத் தெரிந்து கொண்டு நடிக்க வந்தேன்— பள்ளியில் பல கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு நடித்ததால் எனக்கு நடிப்பதில் ஆர்வம் சின்ன வயது முதல் என் ரத்தத்தில் ஊறிப் போன சமாசாரம்— அதனாலே நான் வளரும் போது என்னுடன் நடிப்பும் வளர்ந்ததால் ஆச்சரியம் ஒன்றும் இல்லையே!

இப்போது வரும் திரைப் படங்கள் சமுதாயத்தைக் கெடுப்பதாக கருத்து நிலவுகிறதே?

பழைய படங்களில் கூட ஒருசில படங்களில் மட்டுமே நல்ல கருத்துக்களை கூறியிருந்தார்கள்— அதேபோல் இப்போது புதுமையான முறையில் கருத்தைச் சொல்வதுடன் நல்ல கதை அம்சம் உள்ள படங்களும் வந்துகொண்டுதான் இருக்கின்றன— அது பார்ப்பவர்களின் மனதை பொறுத்தது!

ஒருசில டப்பிங் படங்கள் சில ஆபாசக் காட்சிகளுடன் சேர்த்துத் தவறுதலாக வெளியிடுகிறார்கள்— இந்தப் படங்கள் எப்போதும் ஓடியதாக சரித்திரம் இல்லை!

நீங்கள் எதற்குப் பயப்படுவீர்கள்?

என் மனச்சாட்சிக்கு— எந்த காரியத்தை எடுத்தாலும் நான் தீர ஆராய்ந்த பின்னரே செயலில் இறங்குவேன்— இதற்கு சிறந்த ஆலோசகராக என் மனச்சாட்சியை நம்புகிறேன்—

[ல—10]



பதுளை மாவட்டத்தில்

# சிறிய நீர்ப்பாசன திட்டங்கள் புனரமைப்பு

கொழும்பு, ஏப் 4

உலக வங்கியின் நிதி உதவியுடன் பதுளை மாவட்டத்தில் சிறிய நீர்ப்பாசன திட்டங்கள் புனரமைக்கப்படும்.

பதுளை மாவட்ட ஒன்றிணைக்கப்பட்ட கிராம அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 17 லட்சம் ரூபா செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

பதுளை மாவட்டத்தில் தற்சமயம் கமநல சேவை திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் சிறிய நீர்ப்பாசனங்களை புனரமைப்பதற்காகவே இந்த நிதி செலவிடப்படும்.

பதுளை மாவட்டத்திலுள்ள சிறிமல்கொட, கொஸ்வத்தை, லியன்கொல்ல, ஊனகல்லாவெல, பட்டி அராவ, பஹல வெல்யாய, பொல்கஹகும்புர, கொடகெடிய, கெஹெல்லந்த, தொடகும்புர, வேகம, மிரஹல் கழுவ ஆகிய கால்வாய்களே புனரமைக்கப்படவுள்ளன.

இந்த கால்வாய்களின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு உலக வங்கியின் விவசாய அபிவிருத்தி தொடர்பான சர்வதேச நிதியமே நிதி உதவிகளை வழங்கும்

(ல—வ)

# ஆசிரியர் தெரிவு

## போட்டிப் பரீட்சையை பின்போடக் கோரிக்கை

கொழும்பு, ஏப் 4

இம்மாதம் 28ஆம் திகதி நடைபெறவுள்ள கல்வியியல் உள்ளகப் பட்டப்பின் கல்வித் தகுதித் தேர்வு நெறிக்கென ஆசிரியர்களை தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சையை இருவாரங்களுக்கு பிற்போட வேண்டும்.

ஸ்ரீலங்கா பட்டதாரி ஆசிரியர் சங்கம் கல்வி, உயர்கல்வி அமைச்சரிடம் இவ்வாறு கேட்டுள்ளது.

இதுகுறித்து ஸ்ரீலங்கா பட்டதாரி ஆசிரியர் சங்கச் செயலாளர் ஜனாப் ஏ எல் எம் முக்தார் கருத்து வெளியீட்டுரையில் கூறியதாவது—

ரமழான் நோன்பு 27—4—90இல் முடிவடைகிறது.

இத்தினங்களில் முஸ்லிம் ஆசிரியர்கள் நோன்பு நோற்றபின் அடுத்த தினம் நோன்புப் பெருநாளைக் கொண்டாடுவர்.

எனவே இத்தினத்தில் மேற்படி பரீட்சையை வைப்பதனால் முஸ்லிம் பட்டதாரி ஆசிரியர்கள் அதற்குத் தோற்ற முடியாத சூழ்நிலை ஏற்படும்.

எனவே மேற்படி பரீட்சையை இரு வாரங்களுக்கு ஒத்திவைப்பதுடன் மாகாணத் தலைநகரங்களில் பரீட்சை நிலையங்களை அமைத்து பரீட்சையை நடத்துமாறும் எமது சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதன் பிரதிகள் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், பரீட்சை ஆணையாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றார்.

(ல—007)



## பரிசளிப்பு விழா

கண்டி மஹியாவை கலைமகள் வித்தியாலய ஆண்டுப் பரிசளிப்பு விழா அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டு கண்டி மேயர் திருமதி சந்திரா ரணராஜா உரையாற்றுவதையும், படத்தில் இடமிருந்து வலமாக கல்வி அதிகாரி ஜனாப் ஜே எம் அஸீஸ், மத்திய மாகாண கல்வி அமைச்சர் திரு இராமநாதன் தொண்டமான், மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் திரு டி எஸ் இத்தமல்கொட, கல்வி அதிகாரி ஜனாப் ஐ எம் தாஹிர், வித்தியாலய அதிபர் திரு முத்து சமபந்தர் ஆகியோர் வீற்றிருப்பதையும் காணலாம்.

[படம்— ஐ ஏ றஸாக்] (ல—017)

# பாகிஸ்தான் அறிஞர் [illegible] கோட்டையில்

கொழும்பு, ஏப் 4

தற்போது இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பாகிஸ்தான் ஜமாஅத்தே இஸ்லாமி துணைச் செயலாளரும், சிறந்த கல்விமானும், இஸ்லாமிய "தஃவாப்" பணியில் ஈடுபடுபவருமான மௌலானா அல் ஹாபிஸ் முஹம்மத் இத்ரீஸ் பேருவளை சீனன்கோட்டை

பெற்றது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினதும், இஸ்லாமிய பயிற்சி மன்றத்தினதும் செயலாளர் அல்ஹாஜ் ஏ ஆர் எம் ஸுலைமான் வரவேற்புரை நிகழ்த்தினார்.

ஜனாப் வை ஐ எம் ஹனீஸ் அறிமுக உரை நிகழ்த்தினார்.

மௌலானா இத்ரீஸ் இஸ்

## கிணறுகள் அமைக்கும் திட்டம்:

# புத்தளம் பகுதி விவசாயிகளுக்கும்

எடுக்க வேண்டும்.

சண்டை காதல் கற்பழிப்பு காட்சிகளில் நடிக்கும் போது மனநிலை எப்படி இருக்கும்?

சண்டை— பெரும்பாலான காட்சிகளில் நானே டூப் இல்லாமல் நடித்து விடுகிறேன்— என்னால் செய்ய முடியாதவைகளை மட்டுமே டூப் போட்டுக் கொள்கிறேன்— நான் சிலம்பு மான்கொம்பு கத்தி சண்டை உடற் பயிற்சி செய்து முடிந்த அளவு நடித்ததால் எனக்கு நிறைய பாராட்டுக் கடிதங்கள் வருகின்றன— சண்டை என்றாலே வீரத்தை வெளிச்சம் காட்டும் பகுதிதானே!

காதல்— எல்லாப் படங்களிலும் காதல் காட்சிகள் இடம் பெறும் காதல் என்றாலே புனிதமான சொல்! எனவே அதை களங்கப்படுத்தாமல் பல படங்கள் சிந்திக்க வைக்கின்றன— கதை இல்லாமல் படங்கள் இல்லை என்பது போல காதல் இல்லாமல் படங்கள் இல்லை என்றே அடித்துச் சொல்லலாம். ஏதாவது ஒரு விதத்தில் காதல் இருக்கும்— அன்பிற்கு மறு பெயர்தான் காதல்!

சண்டை— கதாநாயகனுக்கும் இதற்கும் சம்பந்தமே இருக்காது— அது வில்லன் சமாச்சாரம்— முயற்சி செய்யும் வில்லனை நாங்கள் முறியடித்து

தினபதி சினிமா



நிரோஷாவின் பல அழகை தன்னையே மறந்து ரசிக்கிறாரோ ரகுமான்? [படம்;— "உன்னைக் கண் தேடுதே!" [ல—10]

# ராதிகாவின் மச்சான் வந்த நேரம்



ராதிகா

"சியாமளா" என்னும் புதிய பட நிறுவனத்தினர் "மச்சான் வந்த நேரம்" என்ற பெயரில் ஒரு படம் தயாரிக்கிறார்கள்—

இந்தப் படத்தில் அர்ஜுன் கதாநாயகனாக நடிக்க அவருக்கு ஜோடியாக ராதிகா நடிக்கிறார்!

இவர்களுடன் எஸ் எஸ் சந்திரன் வினுசக்கரவர்த்தி வெண்ணிற ஆடை மூர்த்தி கோவை மழை வித்யா ரசிகா மற்றும் பலரும் நடிக்கிறார்கள்—

ஆர் எச் அஷோக் ஒளிப்பதிவு செய்ய சங்கர்—கணேஷ் இசை அமைக்கிறார்கள்—

கோமல் சுவாமிநாதன் கதை வசனம் எழுதி இருக்கிறார்—

[ல—10]

## பழைய ஸ்டண்ட் நடிகர் காலமானார்

ஜெனோவா சொப்பன சுந்தரி சிவகங்கை சீமை உட்பட ஏராளமான பழைய தமிழ் படங்களுக்கு சண்டைக் காட்சிகள் அமைத்தவர் மணி தியாகராஜசாமி! சென்னையில் வசித்து வந்த இவர் அண்மையில் மரணமானார்—

அவருக்கு வயது 67— அவரது உடல் சென்னை ஏவி எம் ஸ்டுடியோ அருகே உள்ள மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

தியாகராஜசாமிக்கு மனைவியும் மகனும் 2 மகள்களும் உள்ளனர்!

[ல—10]

பலரும்மான மௌலானா அல் ஹாபிஸ் முஹம்மத் இத்ரீஸ் பேருவளை சீனன்கோட்டையிலுள்ள ஜாமிஆ நளீமிய்யாவுக்கு விஜயம் செய்தார்.

அங்கு ஜாமிஆ மாணவர்களுக்கு அவர் உரை நிகழ்த்தினார்.

மாலையில் சீனன்கோட்டை அல் ஹுமைஸரா மத்திய கல்லூரி ஜாபிர் ஹாஜியார் நினைவு மண்டபத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திலும் அவர் சிறப்புரை நிகழ்த்தினார்.

சீனன்கோட்டை இஸ்லாமிய பயிற்சி மன்றம் ஏற்பாடு செய்திருந்த இக்கூட்டம் கல்லூரி உப அதிபர் ஜனாப் ஏ வி எம் மஹ்தூர் தலைமையில் நடை

ஜனாப் வை ஐ எம் ஹனீஸ் அறிமுக உரை நிகழ்த்தினார்.

மௌலானா இத்ரீஸ் இஸ்லாத்தினதும், முஸ்லிம்களினதும் நிலையை வரலாற்றுப் பின்னணியில் விளக்கினார்.

அல்ஹாஜ் எம் எச் எம் ஹபீபுல்லாஹ் நன்றியுரை நிகழ்த்தினார்.

இக்கூட்டத்திற்கு அஷ் ஷெய்கு அகார் முஹம்மத், ஜனாப் முஹம்மத் ரபீக் உட்பட பலர் சமூகமளித்திருந்தனர்.

(ல—007)

## இலங்கையில் இருந்து சென்ற படகில் செப்பு கம்பிகள்

சென்னை, ஏப் 4

இலங்கையில் இருந்து சென்ற படகு ஒன்றில் இருந்த ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான செப்புக் கம்பிகள் கைப்பற்றப்பட்டன—

இந்திய சுங்க அதிகாரிகள் இந்தப் படகை தூத்துக்குடிக்கு அருகில் வைத்து மடக்கிப் பிடித்த போது படகில் இருந்து கம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டன— செப்புக் கம்பிகள் 52 பைகளில் நிறைத்துக் கட்டப்பட்டிருந்தன—

இந்தப் படகில் இருந்த இலங்கைப் பிரஜை ஒருவரும் இந்தியப் பிரஜை ஒருவரும் கைது செய்யப்பட்டனர்—

இச் செய்தியை அகில இந்திய வானொலி நேற்று முன்தினம் ஒலிபரப்பியது.

[இ—கு]

## விவசாயிகளுக்கும் முன்னுரிமை வழங்க கோரிக்கை

புத்தளம், ஏப் 3

"விவசாய குழுக்களுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள கிணறுகள் அமைக்கும் திட்டத்தில் புத்தளப் பகுதி விவசாயிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்."

புத்தளம், வட்டுக்காவளி உடையாவளி விவசாயிகள் சங்கம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

மூன்றாவது ஜனாதிபதி நடமாடும் சேவைத் திட்டத்தின் அமர்வு அண்மையில் புத்தளம் சென்ட் அன்ட்றூஸ் கல்லூரியில் நடைபெற்றது.

அவ்வமயம் வடமேல் மாகாண சபையின் விவசாய அமைச்சர் திரு நிமல் பண்டார அவர்களிடம் விவசாயிகள் சங்கம் இக்கோரிக்கை அடங்கிய மகஜரை சமர்ப்பித்தது.

தூதுக்குழுவில் சங்க செயலாளர் ஜனாப் எம் ஐ எம் அப்துல் லத்தீப், பொருளாளர் ஜனாப் கே எம் நாஹ்முகம்மது ஆகியோர் அடங்கியிருந்தனர்.

மகஜரில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது—

"புத்தளம் ஒரு வரண்ட பிரதேசமாகும். காடுகள் அழிக்கப்பட்டுள்ளதால் ஈரத்தன்மை அற்றுப்போய் விட்டது.

மழை வீழ்ச்சி குறைந்து விட்டதால் மீஓயா நதியிலும் சமீப காலமாக நீர் மிகவும் குறைந்து விட்டது.

இதனால் விவசாயிகளாகிய நாம சிறுபோக காலங்களில் நீரின்றி பெரிதும் அவஸ்தைப்படுகிறோம்.

ஆகவே கிணறுகள் அமைக்கும் திட்டத்தில் இப்பகுதி விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுத்து நீரில்லா பிரச்சினையை தீர்க்க அமைச்சர் முன்வர வேண்டும்."

இப்படி அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ல—241)

## உலக இஸ்லாமிய பொதுச் செயலகத்தில் அஷ்ரப்புக்கு 3 பதவிகள்

கொழும்பு, ஏப் 4

உலக இஸ்லாமிய முன்னணித் தலைவர்கள் பொதுச் செயலகம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம் எச் எம் அஷ்ரப் எம் பியை அதன் உதவி செயலாளர் நாயகமாகவும், நிறைவேற்றுக்குழு உறுப்பினராகவும், ஆசிய பிரதேச பொறுப்பாளராகவும் நியமித்துள்ளது.

ஜனாப் எம் எச் எம் அஷ்ரப் எம் பி கடந்த மார்ச் 19ஆம் திகதி திரிப்போலியில் நடைபெற்ற மேற்படி முன்னணியின் மகா நாட்டில் கலந்துகொண்டார்.

இம்மாநாடு டாக்டர் அகமுட் - முகுமட் - சரீப் தலைமையில் நடைபெற்றது. இவர் உலக இஸ்லாமிய அழைப்பு மன்றத்தின் செயலாளர் நாயகமாவார்.

மேற்படி மாநாட்டில் நாற்பது உறுப்பினர்களைக் கொண்ட நிறைவேற்றுக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது— அத்தோடு ஆறு உதவி செயலாளர் நாயகங்களும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் ஒவ்வொருவரும் உலகின் 6 பிரதேசங்களைப் பிரதிநிதித்துவம் செய்பவர்களாக இருப்பர். ஜனாப் எம் எச் எம் அஷ்ரப் எம் பி ஆசிய பிரதேச முஸ்லிம்களின் விவகாரத்திற்குப் பொறுப்பாக இருப்பார்.

உலகின் வெவ்வேறு நாற்பது முஸ்லிம் நாடுகளின் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

இலங்கையின் சார்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம் எச் எம் அஷ்ரப் எம் பி, ஜனாப் ஹலீம் இஷாக் எம் பி, பாமிஸ் இயக்கத் தலைவர் ஜனாப் எம் சுஹைர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(ல—404)

தினபதி
தந்தி "தினபதி" கொழும்பு
தொலைபேசி
23882, 23884, 23864
தபால் பெட்டி இல 1613
சுடர் 18 கதிர் 4452
— 1990 ஏப்ரல் 5 —

## வெளிநாட்டு விஜயங்கள்

அமைச்சர்களும் அரசாங்க நாடாளுமன்றக் குழு எம பிக்களும் வெளிநாடுகளுக்குச் செல்வது குறித்து வழிகாட்டி விதிகள் உருவாக்கப்படவுள்ளன.

அதற்காக ஜனாதிபதி ஒரு குழுவை நியமித்திருக்கிறார். பிரதமர் திரு டி பி விஜேதுங்க குழுவுக்குத் தலைமை தாங்குகிறார்.

வழிகாட்டி விதிகளை ஒரு வார காலத்துள் சமர்ப்பிக்குமாறு குழுவை ஜனாதிபதி கேட்டிருக்கிறார்.

இதிலிருந்து இந்த விஷயத்தில் ஜனாதிபதி எவ்வளவு அக்கறை கொண்டுள்ளார் என்பது தெரிகிறது.

அமைச்சர்களினதும் எம. பிக்களினதும் வெளிநாட்டு விஜயங்களைக் கூடுமான வரையில் குறைப்பதற்காகவே வழிகாட்டி விதிகள் உருவாக்கப்படுகின்றன.

பல அமைச்சர்களும் எம பிக்களும உத்தியோக ரீதியில் அரசாங்கச் செலவில் வெளிநாடுகளுக்கு விஜயம செய்வதை ஒரு உல்லாசப் பொழுது போக்காகக் கருதுகிறார்கள்.

அதனால் அரசாங்கத்துக்கு வீண் செலவு ஏற்படுகிறது. அமைச்சர்கள் மற்றும எம பிக்கள் இங்கே ஆற்ற வேண்டிய பணி தடைப்படுகிறது. காலமும வீணாகி விடுகிறது.

மக்களுடன் இருந்து, அவர்களின் தேவை அறிந்து அவர்களுக்கு உதவ வேண்டியவர்கள் மக்களின் வரிப் பணத்தில் வெளிநாடுகளில் உல்லாசமாகப் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தால் மக்களின் நிலை என்னவாகும?

வெளிநாடுகளில் வழமையாக நடக்கும் மாநாடுகள்

# தீய எண்ணம் துர்க்குணம் துன்ப வாழ்வு தந்திடும்

## அவற்றை அகற்றினாலே; தேவனை நாம் காணலாம்

தெய்வீகத் தன்மையினால் நீக்கமற நாம நிறைந்திருந்த போதிலும், அற்ப உலக விஷயங்களாகிய பந்தபாசங்களை வளர்த்துக் கொள்வதால் துன்பத்திற்கு ஆளாகின்றோம.

தீயிலிருந்து எழும சாமபல் அதனை மறைத்த விடுகின்றது. தண்ணீரில் தோன்றிய பாசி அதனையே மறைத்து விடுகின்றது.

காட்ராக்ட் என்னும கண் நோய் தோன்றி பார்வையைக் குருடாக்கி விடுகின்றது. கண்ணாடியில் படியும அழுக்குகள் அதில் படிந்த தெளிவற்ற பிரதி பிமபத்தைக் கொடுக்கும.

அவ்வாறே அறியாமை தெய்வீகத்திநின்ற உருவாகி இறுதியில் நமது தெய்வீக ஞானத்தையே மாசுபடச் செய்து விடும.

எங்களிடமுள்ள தீய குணங்கள்தான் இவற்றிற்குப் பொறுப்பாகவிருக்கின்றன.

தீய எண்ணங்களையும, தீய குணங்களையும நமமிடமிருந்து அகற்றுவோமேயானால், தேவாதி தேவனை நமமால் காணக்கூடியதாக இருக்கும.

நமது மனத்தில் இருந்து தீய நோக்கங்களையும மனச் சார்புகளையும மனப்பற்றுக்களையும அகற்றினால்தான், அதாவது, இறைத் தன்மையைக் காணும போதுதான் நாம ஈச்வர தர்ம வழிக்கு அமைவாய் வாழலாம.

**— பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா —**

[தமிழாக்கம— பொன் கனகராசா]

ஈச்வர தர்ம வழியில் வாழ ஒருவன் விருமபினால் அவன் தனது மனத்தைத் தூய்மையாக்க வேண்டும.

மூளை நிறைய தீய எண்ணங்களால் நிரப்பப்பட்டு, செவிகள் தீஞ்சொற்களை செவியுறும பொழுதும், தீய காட்சிகளைக் கண்கள் சாடையாகக் காணும பொழுதும, மனமானது அங்கு மிங்குமாகத் தத்தளித்து ஏமாற்றிக் கொண்டு இருக்கும பொழுதும, தர்மம உனக்குக் கிட்ட

### சாயி அமிர்தம்

ஓரிடமும வரமாட்டாது.

உண்மையில் நீங்கள் சுவாமிக்கு உரியவர்களாக இருப்பதே உண்மை நிலையாகும.

இத்தகைய சமர்ப்பண நிலையில், உங்கள் வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள்வீரேயானால், நீங்கள் பெரிதும அருளாசிகளைப் பெற்றவர்களாவீர்கள்.

இத்தகைய நோக்கினால் உங்கள் நாட்டின் புனிதத் தன்மையைப் பேணுபவர்களாவீர்கள்.

இந்த ஒரு வாக்கியத்தை உங்கள் மூளையில் பதித்து வைத்திருந்தால் கீதையின் உள்நோக்கையும, போதனைகளையும பரப்பக் கூடியவர்களாக இருப்பீர்கள்.

அதாவது "அவனே அகிலத்தின் தந்தையும, தலைவனுமாவான்".

பரமாத்மாவில் உங்கள் திட நமபிக்கையை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும. ஏனெனில் அவரே உலகத்தை ஆள்பவரும உங்கள் செயல்களை ஊக்குவிப்பவருமாக உள்ளார்.

இத்தகைய திடநமபிக்கை அருச்சுனனுடைய உள்ளத்தில் ஒரு பலத்த தாக்கத்தை ஏற்படுத்தியதால், அவன் தெய்வ சங்கல்பத்தின் பிரகாரம கருமமாற்றினான்.

அருச்சுனன் உறுதிமொழிந்தான், "உன்னுடைய ஆணைப்படி செயற்படுவேன் என" தெரிந்தோ, தெரியாமலோ நான் கேட்ட பற்பல கேள்விகளுக்காக என்னை மன்னிப்பீராக.

எனது மதிநுட்பம, ஆணவம உடற்பலப் பராக்கிரமம ஆகியவற்றினால் எழுந்த அகங்கார உணர்வால் நான் பொன்னான மதிப்பிடற்கரிய நேரத்தைத் துர்ப்பிரயோகஞ் செய்து விட்டேன்.

இறைவனில் இருந்து பெறும பலமின்றி உடற் பலப்பராக்கிரமம, மனோவலு, படித்ததனால் ஏற்பட்ட பாண்டித்தியம ஆகியவற்றால் ஏற்படும பலத்தால் எவ்வித பலனுமில்லை. தெய்வீக பலமில்லா விட்டால், இவையெல்லாம பலவீனமானவையாகும.

உனது இளமை வீரியத்தையும அழகையும இட்டுப் பெருமைப்படாதே. உனது புது செழிப்பான, பளபளப்பான எழில் காலையில் மலர்ந்து அந்தியில் வாடும மலரைப் போன்றது.

உனது சிறப்பு வாய்ந்த பெரும பேறுகள் பற்றிய கதைகளைக் கேட்டவிடத்து மின்னல் ஒளி போன்று தோன்றி மறைந்த பின் ஒரே இருள் சூழ்ந்த அந்தகார நிலைக்குத் தள்ளி விடுகிறது.

நமது தெய்வீகமான பரிபூரண முடிவு நிலையை மறந்து, நிலையில்லா இன்பங்களால் ஈர்க்கப்படக் கூடாது.

ஒவ்வொரு மாணவனும கீதையின் உள்நோக்கை (அடிப்படை நோக்கை) அறிந்து, உணர்ந்து கொள்வதற்கும, அதனைச் செயற்படுத்துவதற்கும சஞ்சலமற்ற உண்மையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும.

பகவத்கீதையில் பெரும பேறாகக் கருதப்படும தெய்வீகமானதும, ஆனந்தமயமானதுமான ஆத்மதத்துவத்தை உள்ளத்தில் அமர்த்தி நீங்கள் பாதுகாக்க வேண்டும. (ம)

## அரசு — விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்களின் அபிப்பிராயம்

கொழுமபு ஏப் 4

அரசுக்கும, விடுதலைப் புலிகளுக்கும இடையில் நடைபெறும பேச்சு வார்த்தைகளில் முஸ்லிமகளின் நலனும கவனிககப்பட வேண்டுமென்பது தொடர்பாக முஸ்லிமகளின் அபிப்பிராயம தெரிவிக்கப்படும.

இந்த விடயமாக நீதி அமைச்சரும வடக்கு, கிழக்கு மாகாண

பெற்ற லீக்கின் செயற்குழுக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது,

கூட்டத்துக்கு முஸ்லிம லீக் தலைவர் அல்ஹாஜ் டாக்டர் எம சி எம கலீல் தலைமை வகித்தார்.

அரசுக்கும, விடுதலைப் புலிகளுக்கும இடையில் நடத்தப்படும பேச்சு வார்த்தைகளில் முஸ்லிமகளின் விவகாரமும

## புதிய அணையினால் இலவங்குளப் பகுதிக்கு ஆபத்து

புத்தளம, ஏப் 3

புத்தளத்திற்கு வடக்கே சுமார் 20 மைல் தூரத்தில் உள்ள "நெற் களஞ்சியம" என அழைக்கப்படும இலவங்குளப் பகுதிக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இப்பகுதிக்கு ஊடாக பாயும "கால ஓயா" நதிக்கு குறுக்கே அமைக்கப்படவுள்ள அணை மூலம இலவங்குளம நெற்களஞ்சியப் பகுதி பாதிக்கப்படலாம என அஞ்சப்படுகின்றது.

மேலும வில்பத்து சரணாலயத்தில் வாழும எண்ணற்ற மிருகங்களும இந்த ஆற்று நீரையே பருகி வருகின்றன.

ஆனால் தற்சமயம அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள அணையினால் பெரும பாதிப்பு ஏற்படலாம என நமபப்படுகின்றது.

இது சமபந்தமாக வடமேல் மாகாண சபையின் புத்தளம பிரதிநிதி டாக்டர் ஐ எம இல்யாஸ் கருத்து தெரிவிக்கையில்,

"இத்திட்டம மிகவும் பாரதூரமான விடயமாகும.

இத்திட்டம நிறைவேற்றப்பட்டால் இலவங்குளம பகுதி வரண்டு போய் விடும. நெற்செய்கையையே முழுக்க முழுக்க நமபியுள்ள இப்பகுதி மக்களின் வாழ்வு சூன்யமாகிவிடும.

எனவே இத்திட்டம உடனடியாக தடுத்து நிறுத்தப்படல் வேண்டும" என்றார். (ஐ—241)

புதிய முஸ்லிம சமய, கலாசார ராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள அல்ஹாஜ் ஏ. எச்.

## செய்தித் திரட்டு

### ரூ. 3 லட்சம் நிதி ஒதுக்கீடு

அக்குறணை ஏப் 3

யட்டிநுவர பகுதியில் உள்ள கண்டி கல்வித் திணைக்களத்தின் கீழ் இயங்கிவரும ஐந்து பாடசாலைகளுக்கு தேவையான விஞ்ஞான கல்விப் போதனைக்கான விஞ்ஞான் உபகரணங்களினை வழங்க மூன்று லட்சத்து ஐமபதாயிரம ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (ஐ—411)

### காணி பகிர்ந்தளிப்பு

அக்குறணை ஏப் 3

இரத்தோட்டை பகுதியில் உள்ள காணியற்ற நூற்று பத குடுமபங்களுக்கு ஒவிலவத்த எனுமிடத்தில் உள்ள காணிகள், குடுமபம ஒன்றுக்கு தலா அரை ஏக்கர் என்ற வீதப்படி பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (ஐ—411)

### தட்டச்சு இயந்திரம் அன்பளிப்பு

திருகோணமலை ஏப் 3

திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர்களான திரு சி இரட்ணராஜா ஜனாப் அ பஸ்ரா அமா ஆகியோர் பாடசாலைகளுக்கு தட்டச்சு றோணியோ இயந்திரங்களை அன்பளிப்புச் செய்தனா.

செல்வநாயகபுரம வித்தியாலயம கோபாலபுரம வித்தியாலயம திரியாய் மகா வித்தியாலயம ஆகியவற்றுக்கு மாணவர்களின் கல்வி அபிவிருத்தி கருதி ஒவ்வொரு தட்டச்சு றோணியோ இயந்திரங்களை பனமுக வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து பெற்றுக் கொடுத்துள்ளனர். (ஐ—287)

### குழாய் கிணறுகள்

தெல்தெனிய ஏப் 3

மெனிக்கின்ன உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட குமபுக்கந்துறையில் ஒன்பது குழாய்க்கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன.

இதனையடுத்த இப்பகுதியில்

யாக நடக்கும மாநாடுகள் மற்றும வைபவங்களில் அந்தந்த நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களைச் சேர்ந்தவர்கள் கலந்து கொள்ளலாம. இங்கிருந்து எவரும போகத் தேவையில்லை.

வெளிநாடுகளில் மிக முக்கியமான கருமங்கள் நடந்தால் மட்டும அமைச்சர்களோ அல்லது எம பிக்களோ அவற்றிற்குச் செல்லலாம. அதுவும அவர்கள் செல்வதால் நாட்டுக்கு நன்மை ஏற்படும என்று கண்டால் மட்டுமதான்.

இந்த அடிப்படையிலேயே வழிகாட்டி விதிகள் உருவாக்கப்படும என்ற ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

வழி காட்டி விதிகளை உருவாக்கி அமைச்சர்கள் மற்றும எம பிக்களின் வெளிநாட்டு விஜயங்களைக் கட்டுப்படுத்துவது பாராட்டுக்கு உரியதும வரவேற்கத்தக்கதுமாகும.

சமாதானக் குழுத் தலைவருமான ஜனாப் ஏ சீ. எஸ் ஹமீதை அகில இலங்கை முஸ்லிம லீக்கின் தூதுக்குழு ஒன்று சந்திக்கும.

கடந்த சனியன்று முஸ்லிம லீக் தலைமையகத்தில் நடை

## அடிக்கல் நடும் விழா

கொழுமபு, ஏப். 4

அப்புத்தளை, கஹுபான அருள்மிகு ஸ்ரீ தேவி கருமாரியமமன் கோயில் கல்யாண மண்டப அடிக்கல் நடும விழா எதிர்வரும 9 ஆம திகதி நடைபெறும.

கலாசார தகவல் துறை அமைச்சர் திரு வி ஜே மு லொக்கு பண்டார பிரதம அதிதியாக கலந்து கொண்டு அடிக்கல்லை நடுவார்.

கோவில் பிரதம குருக்கள் ஸ்ரீ பாலமூர்த்தி சர்மாவின் சங்காபிஷேக கிரியைகளுடன் விழா ஆரமபமாகும. (ஐ-ய)

முஸ்லிமகளின் விவகாரமும கவனிக்கப்பட வேண்டுமென்பதை நாம வலியுறுத்த வேண்டும.

நிர்வாக மாற்றங்கள் வரும போது முஸ்லிமகளுக்கு பாதிப்பு ஏற்படலாகாது.

இது தொடர்பாக அமைச்சரிடம விளக்கி முஸ்லிமகளின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும தூதுக்குழு அமைச்சரிடம வலியுறுத்தும,

முஸ்லிம லீக் கூட்டத்தில் ராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள அல்ஹாஜ் ஏ எச் எம அஸ்வருக்கும பாராட்டும, வாழ்த்தும தெரிவிக்கப்பட்டது,

முன்னாள் சவூதி தூவர் அல்ஹாஜ் ஏ எ. எம ஹாஷிம வடக்கு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் அல்ஹாஜ் மதூர் மெளலானா, ஜனாப் எம எச் ஆமிட் எம பி உட்பட பலரும அல்ஹாஜ் அஸ்வருக்கு வாழ்த்தும பாராட்டும தெரிவித்து உரையாற்றினர். (வ-007)

# மகாவலி "எச்" பிரிவில் நெற்செய்கை

கொழுமபு ஏப் 4

இமமுறை பெருமபோகத்தின் போது மகாவலி அபிவிருத்தி "எச்" பிரிவுக்குரிய தமபுத்தேகம பகுதியில் 13 ஹெக்டரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

இப்பகுதியில் இம்முறை 60 ஆயிரம மெட்ரிக் தொன் நெல் விளைச்சல் கிடைக்கும என இலங்கை மகாவலி அபிவிருத்தி அதிகார சபை நமபிக்கை தெரிவிக்கிறது.

நெல் விளைச்சலை அடுத்து இப்பகுதியில் நெல்லின் விலை பெருமளவு வீழ்ச்சி அடையும என்று தமபுத்தேகம விவசாய அதிகாரி திரு ரஞ்சன் ஆட்டிகல தெரிவித்தார். (ஐ-வ)

# சமய நிகழ்ச்சிகள்

## கும்பாபிஷேகம் 11 ஆம் திகதி

கொழுமபு, ஏப். 4

மஸ்கெலியா மொக்காத் தோட்ட ஸ்ரீ கருமாரி அமமன் ஆலய மகா கும்பாபிஷேகம எதிர்வரும 11 ஆம திகதி புதன்கிழமை நடைபெறும.

இந்த சமய, இந்து கலாசார ராஜாங்க அமைச்சர் திரு பி பி தேவராஜ், கைத்தொழில் ராஜாங்க அமைச்சர் திரு எம எஸ் செல்லச்சாமி, நுவரெலியா மாவட்ட எம பி திரு காமினி திஸாநாயக்க ஆகியோர் இவ் வைபவத்தில் கலந்து கொள்வர்.

மகா கும்பாபிஷேக விழாவையொட்டி 7 ஆம திகதி கர்மாரமப கிரியைகளும, 8 ஆம திகதி நவக்கிரக சாந்தியும 9 ஆம திகதி யாக பூஜையும 10 ஆம திகதி எண்ணெய்க் காப்புடன் ஹோம குண்டல பூஜையும நடைபெறும.

மகா கும்பாபிஷேக கிரியைகள் நோர்வூட் ஸ்ரீ சிசுசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம பிரதம குரு சிவஸ்ரீ இ பிரேமகாந்த குருக்கள் தலைமையில் நடைபெறும. (ற-ய)

## வருடாந்த பங்குனி உத்தர விழா

இராகலை ஏப் 3

எதிர்வரும 6 ஆம திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம 8 ஆம திகதி வரை கிளென்டெவன் தோட்ட ஸ்ரீ முருகன் ஆலயத்தில் வருடாந்த பங்குனி உத்தரவிழா நடைபெறும,

இதனையொட்டி தினமும விசேட ஆராதனைகளும, கலை நிகழ்ச்சிகளும இடமபெறும, (ஐ-265)

# புனித ரமழான் சிந்தனைகள்

ஒரு மனிதன் தன்னைத் தானே அடக்கியாளக் கூடிய நிலையை அடையும போதுதான் உயர்ந்தவனாக மாறுகிறான்—

எந்த ஒரு நிலையிலும சந்தர்ப்பத்திலும அவசரப்படாது ஆத்திரப்படாது தீர சிந்தித்து தெளிவு பெற்ற அதன் வழி இயங்கும போது மனிதன் புனிதனாகக் காட்சியளிக்கிறான்—

'உனது மனமே உனது சிறைச்சாலை!

எப்பொழுது அதை விட்டு நீங்குவாயோ அப்பொழுது தான் நீ நித்தியமான சுகம பெற்றவனாய்!" (ஷறஹுல் ஹிகம)—

மனம ஆசைப்பட்டவற்றை எல்லாம நிறைவேற்ற முற்படும போது மனிதன் தன் தலையில் தானே மண்ணை வாரி இறைத்துக் கொண்டவன் போலாவான்!

மனம விரும்புகிறதே என்று நன்றாக உண்டு குடித்து சுகம அனுபவித்தவன் உயர் குணத்திலிருந்து அகன்று விடுகிறான்—

மனத்தின் இச்சைகளை மதித்ததால் அவனது உடலில் மதமதப்பு ஏற்படுகிறது—

அளவுக்கு மீறி உண்டு, குடித்து சுகம கண்டதால் ஒரு வித போதை வெறி ஆட்கொள்கிறது அடுத்த கணமே அவன் வெறியனாகிறான்!

இதன் காரணமாக பஞ்சமாபாதகங்களை துணிந்து மேற்கொள்கிறான்—

இதன் விளைவாக பகை வளர்ந்து சண்டை, சச்சரவு தலை தூக்குகிறது!

அடிதடி மோதல் நடக்கிறது—

மானம, மரியாதை அனைத்தும கப்பலேறுகிறது—

"அளவுக்கு அதிகமான சொற்கள், அளவுக்கு அதிகமான ஆகாரம — அளவுக்கு அதிகமான தூக்கம ஆகிய மூன்று காரணங்களினாலேயே உங்களுக்கு முன்னிருந்தவர்கள் அழிந்தனர்!" (இப்றாஹீம நக்ஈ)

மனதைக் கட்டி ஆளக் கூடிய பயிற்சியை புனித ரமழான் நோன்பு சிறப்பாக மனிதனுக்கு அளிக்கிறது—

அவனது எல்லைக்குட்பட்ட நியாயமான ஆசைகளைக் கூட கட்டுப்படுத்தக்கூடிய மனோதிடத்தை நோன்பு அளிக்கிறது—

உணவை, பானத்தை — உறக்கத்தை துறந்து அல்லாஹ்வின் ஏவல்படி இச்சைகளைக் கட்டுப்படுத்தி வாழ்க்கைப் பயிற்சி பெறுவது ரமழான் மாதத்தில் ஒவ்வொரு முஸ்லிமினதும கடமை!

இந்தக் கடுமையான கடமை மனித உடலை ஒரு மாத காலம வருத்துகிறது!

ஆனால் இந்த வருத்தம ஏனைய பதினொரு மாதங்களுக்கும இன்பத்தை வழங்குகிறது!

எனவே — இப்புனித ரமழானில் உணவையும பானத்தையும கட்டுப்படுத்துவது போல் மனத்தையும கட்டுப்படுத்தி வல்ல அல்லாஹ்வின் நல்லடியார்கள் கூட்டத்தில் சேர உறுதி பூணுவோமாக!

ஆமீன்! ஆமீன்!! யாரப்பல் ஆலமீன்!!!

— எம் ஆர் எம் பௌஸர்

இதனையடுத்து இப்பகுதியில் நிலவி வந்த குடிதண்ணீர் பிரச்சினை ஓரளவு தீர்த்து வைக்கப்பட்டுள்ளது,

பின்லாந்து அரசின் நன்கொடைத் திட்டத்தின் கீழே இக்கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது, (ஐ 289)

## நல்லூர் கோவிலுக்கு நன்கொடை

கொழுமபு, ஏப். 4

யாழ்ப்பாணம நல்லூர் ஸ்ரீ முத்துவிநாயகர் பிள்ளையார் தேவஸ்தானத்தின் திருப்பணிக்காக அகில இலங்கை சபரிமலை ஸ்ரீசாஸ்தாபீடம ரூபா பத்தாயிரம நன்கொடையாக ஒதுக்கியுள்ளது.

ஸ்ரீ சாஸ்தாபீடாதிபதி ஸ்ரீ ஐய்யப்பதாஸன் சாமபசிவ சரவணபவக் குருக்கள் மேற்படி நன்கொடையை ஆலய தர்மகர்த்தாவிடம கையளித்தார். (ஐ-ங)

## யானைகள் அட்டகாசம்

கொழுமபு, ஏப். 3

கித்தூர் உறகாமம புல்லுமலை போன்ற காட்டுப் பிரதேசத்தில் உள்ள கிராமங்களில் யானைகள் அட்டகாசம புரிகின்றன—

ஏழைக்குடியானவர்களின் குடிசைகளையும [illegible] பயிர்களையும யானைகள் அழிக்க [illegible]—

யானைகளை அழிக்கக் கூடாது என [illegible] நால் [illegible] முடியாதிருக்கின்றது— (ஐ-404)

அரபு நாடுகளின்

# இராணுவ நடவடிக்கை: கண்காணிக்க செய்மதி

## ஈராக் எச்சரிக்கையை அடுத்து இஸ்ரவேல் அனுப்பியது

டெல்அவிவ், ஏப்ரல் 4

**இஸ்ரவேலின் அயலிலுள்ள அரபு நாடுகளின் இராணுவ நடவடிக்கைகளைக் கண்காணிக்க செய்மதி யொன்றினை இஸ்ரவேல் விண்வெளிக்கு அனுப்பியிருக்கிறது.**

இஸ்ரவேல் மீது இரசாயன ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் நடத்தி அதனைத் தகர்த்து விடுவோம் என ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் செவ்வாயன்று எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இந்த எச்சரிக்கையினையடுத்தே இஸ்ரவேல் பரீட்சார்த்த ரீதியிலான செய்மதியொன்றை விண்வெளிக்கு அனுப்பியிருக்கிறது.

இஸ்ரவேல் காபந்து பிரதமர் யிட்ஷாக் ஷமீர் இதுபற்றிக் கருத்து வெளியிட்டார்.

இஸ்ரவேலுக்கு எதிரான எந்தவொரு சவாலையும் எமக்கு சமாளிக்க முடியும். அதனை நிரூபிக்கவே நாம் செய்மதியை அனுப்பியிருக்கிறோம் எனக் கூறினார்.

"ஒ பெக் 2" என்ற செய்மதி பரீட்சார்த்த ரீதியிலானதென பாதுகாப்பு அதிகாரிகள் கூறினர். அயலிலுள்ள அரபு நாடுகளின் சகல விதமான உளவு நடவடிக்கைகளையும் கண்காணிக்கும் தகுதி இந்த செய்மதிக்கு இருக்கிறதெனக் கூறப்படுகிறது.

1988 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் "ஒபெக் 1" என்ற செய்மதி விண்வெளிக்கு அனுப்பப்பட்டது.

"ஒ பெக் 1" நான்கு மாதங்கள் வெற்றிகரமாகப் பயணம் செய்ததாகவும் அறிவிக்கப்படு...

அளித்த தகவலின்படி இந்த செய்மதிகள் துணையுடன் இஸ்ரவேலுக்கெதிராக எடுக்கப்படும் எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கண்டறிய முடியுமெனத் தெரிய வருகிறது.

### அமெரிக்கா கண்டனம்

இதேவேளையில் ஈராக்கின் எச்சரிக்கை குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் நேற்றுக் கண்டனம் தெரிவித்தார்.

இது போன்ற அறிக்கைகள் பிராந்திய நெருக்கடிக்கு ஏதுவாகின்றன. ஏற்கனவே குலைந்து போயிருக்கும் பிராந்திய அமைதியை மேலும் சீர்குலைத்து விடவும் வகை செய்யும் என புஷ் கண்டித்திருக்கிறார். (எ)

## ஒஸ்லோ சிறைக் கைதிகள் இருவருக்கு திடீர் விடுதலை

ஒஸ்லோ ஏப் 4

ஏப்ரல் 1ஆம் திகதியன்று ஒஸ்லோ சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்து வந்த இருவர் சுதந்திரமாக வெளியேறினர்.

சிறைத் தண்டனை அனுபவித்து வந்த இருவரின் நண்பர் ஒருவர் அன்றைய தினம் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி போல் உடையணிந்து ஒஸ்லோ சிறைச்சாலைக்குள் நுழைந்தார். நண்பர்கள் இருவரையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு சிறைப் பாதுகாவலரைப் பணித்தார்.

அன்று ஏப்ரல் முட்டாள்கள் தினம் என்பதை மறந்துவிட்ட அவர் உடனடியாக இரு கைதிகளையும் விடுதலை செய்ய பணித்தார்.

அன்று இரவு இருவரையும் சந்தித்த போது நான் அதிர்ச்சி அடைந்தேன் என அந்த நண்பர் கூறினார்.

சிறைப் பாதுகாவலர் இது விடயத்தில் பெரும் தவறிழைத்து விட்டார். இதனை ஒரு கேலியாக ஏற்றுக் கொள்ள முடியாதென சிறைச்சாலை இயக்குனர் தெரிவித்தார். (எ)

போபர்ஸ் ஆயுத ஊழல்

## தஸ்தாவேஜுகளை தந்து உதவும்படி சுவீடனிடம் இந்தியா வேண்டுகோள்

ஸ்டொக்ஹோம் ஏப் 4

போபர்ஸ் ஆயுத ஊழல் சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுக்களை கையளிக்குமாறு இந்தியா சுவீடனைக் கேட்டிருக்கிறது.

போபர்ஸ் ஆயுத ஊழல் விசாரணைகளைத் தொடர்வதற்கு மேற்படி தஸ்தாவேஜுக்களைக் கையளித்து உதவும்படி இந்தியா கோரியிருக்கிறது. சுவீடன் வெளிநாட்டு அமைச்சு செவ்வாயன்று இத்தகவலை வெளியிட்டது. ஸ்டொக்ஹோமில் உள்ள வெளிநாட்டமைச்சுக் காரியாலயத்துக்கு புதுடில்லியிலிருந்த கோரிக்கை சம்பந்தப்பட்ட அறிக்கை அனுப்பப்பட்டிருந்தது.

இந்திய விசாரணையாளர்கள் போபர்ஸ் ஊழலில் சம்பந்தப்பட்ட சுவீடன் நாட்டவர்களை விசாரிக்க வேண்டியிருக்கிறது. இந்த விடயத்திலும் எமக்கு சுவீடன் உதவ வேண்டுமென இந்தியா மேலும் கேட்டுள்ளது.

இதே போன்ற கோரிக்கைகளை இந்தியா இதற்கு முன்னரும் விடுத்திருக்கிறது. இந்தக் கோரிக்கைகள் தொடர்ந்து நிராகரிக்கப்பட்டு வந்திருக்கின்றன. (எ)

லண்டனில்

## குண்டு அச்சம் காரணமாக இந்திய ஜனாதிபதியை வரவேற்கும் வைபவம் ரத்து

லண்டன் ஏப் 4

இந்திய ஜனாதிபதி ராமஸ்வாமி வெங்கட்ராமனுக்கு லண்டன் விக்டோரியா ரயில் நிலையத்தில் அளிக்கப்படவிருந்த வரவேற்பு வைபவம் ஒன்று ரத்துச் செய்யப்பட்டது.

குண்டு அச்சம் காரணமாகவே மேற்படி வைபவம் ரத்துச் செய்யப்பட்டது.

கட்விக் விமான நிலையம் வந்திறங்கிய இந்திய ஜனாதிபதியை கென்ட் கோமகனும் கென்ட் சீமாட்டியும் வரவேற்றனர்.

எலிஸபெத் மகாராணிக்குப் பதிலாகவே இவர்கள் இருவரும் விமான நிலையம் சென்று இந்திய ஜனாதிபதியை வரவேற்றனர்.

அரச ரயில் மூலம் விக்டோரியா சென்று எலிஸபெத் மகாராணி, இளவரசர் பிலிப் - வேல்ஸ் இளவரசர் - இளவரசி பிரதமர் மாகிரட் தாட்சர் ஆகியோரைச் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

உத்தியோகபூர்வ வரவேற்பு வைபவம் விக்டோரியா ரயில் நிலையத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

கட்விக் ரயில் பாதையருகே புதரொன்றில் புதைத்திருந்த குண்டொன்று பொலீஸாரால் கண்டுபிடிக்கப்பட்டு குண்டுகளை செயலிழக்கச் செய்யும் பிரிவினரால் உடனடியாக அது செயலிழக்கச் செய்யப்பட்டது. (எ)

## உலகச் செய்திகள்

## ஈராக் மீது உலக நாடுகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்

—மோஷே ஆரன்ஸ்

ஜெரூஸலெம் ஏப் 4

குண்டு வைத்து தகர்ப்பதாக இஸ்ரவேல் மீது ஈராக் விடுத்த எச்சரிக்கை குறித்து சர்வதேச ரீதியில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இவ்வாறு இஸ்ரவேல் ... கேட்டிருக்கிறார்.

மேயர்களுக்கான சர்வதேச மாநாடொன்றில் அவர் உரையாற்றினார்.

அவ்வேளையிலேயே அவர் இதுபற்றிக் கூறினார்.

... ஹுசேன் தடையாக இருக்கிறார் என அவர் குற்றம்சாட்டினார்.

பாக்தாத்தின் கையிருப்பில் இருக்கும் இரசாயன ஆயுதங்கள் பற்றிய முழு விவரங்களையும் மேற்கு நாடுகள் திரட்டாமல் ...

## இமெல்டா மார்க்கோஸ்: எதிரான விசாரணை ஆரம்பம்

நியூயோர்க், ஏப். 4

முன்னாள் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி மார்க்கோஸின் மனைவி திருமதி இமெல்டா மார்க்கோஸுக்கு எதிரான ஊழல் வழக்கு விசாரணைகள் செவ்வாயன்று ஆரம்பமாகின.

நீண்ட காலம் தாமதப்பட்டு வந்த இந்த விசாரணைகள் சமஷ்டி நீதிமன்றத்தில் நடந்தன.

சவூதி அரேபிய வர்த்தகரும் கோடீஸ்வரருமான அட்னான் கஷோகியும் இந்த வழக்கில் சம்பந்தப்பட்டிருக்கிறார்.

"குற்றச் செயல்களின் பங்காளிகள்" என இவர்கள் இருவரும் வர்ணிக்கப்பட்டுள்ளனர். இமெல்டா மார்க்கோஸ் நீதிமன்றம் வந்த போது அவரைப் பெரும் தொகையிலான பத்திரிகையாளர்கள் சுற்றி வளைத்துக் கொண்டனர். (எ)

## ஜா - எலயில் சட்டவிரோத சாராய குதாம் முற்றுகை

பப்பட்டது.

"ஓ பெக் 1" நான்கு மாதங்கள் வெற்றிகரமாகப் பயணம் செய்ததாகவும் அறிவிக்கப்படுகிறது.

இஸ்ரவேல் விண்வெளி நிறுவன தலைவர் யுவெல் நீமென்

விடுத்த எச்சரிக்கை குறித்து சர்வதேச ரீதியில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்- இவ்வாறு இஸ்ரவேல் வெளிநாட்டமைச்சர் மோஷே ஆரன்ஸ் உலக நாடுகளைக் கேட்டிருக்கிறார்-

ஈராக் மீது இஸ்ரவேல் தாக்குதல் எதனையும் மேற்கொண்டால் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தி இஸ்ரவேலின் அரைவாசிப் பகுதியை நாம அழித்துவிடுவோம என ஈராக் ஜனாதிபதி சதாம ஹுசேன் செவ்வாயன்று எச்சரிக்கை செய்திருந்தார் எமக்கு அணுகுண்டுகள் தேவையில்லை- இரசாயன குண்டுகளால் இஸ்ரவேலின் அரை வாசிப் பகுதியை தீ வைத்து நாசம செய்வோம என அவர் தெரிவித்திருந்தார்-

இந்த எச்சரிக்கைகளை அடுத்தே உலக நாடுகள் இது விடயத்தில் ஈராக்குக்கெதிராக செயல்பட வேண்டுமென இஸ்ரவேல் வெளிநாட்டமைச்சர்

யாற்றினார்-

அவ்வேளையிலேயே அவர் இதுபற்றிக் கூறினார்-

மத்திய கிழக்கு சமாதான நடவடிக்கைகளுக்கும சதாம

இருக்கும இரசாயன ஆயுதங்கள் பற்றிய முழு விவரங்களையும மேற்கு நாடுகள் திரட்டாமல் இருப்பது குறித்து அவர் கண்டனம தெரிவித்தார்- (எ)

## இறந்தோர் எண்ணிக்கை 32ஆக உயர்வு

சென்னை, ஏப். 4

பஞ்சாப்பில் நேற்று முன்தினம இடம்பெற்ற குண்டு வெடிப்பில் இறந்தோர் எண்ணிக்கை 32 ஆக உயர்ந்திருக்கிறது.

குருதாப்பூர் மாவட்டத்தில் உள்ள பட்டாலா நகரத்தில் நடந்த ஊர்வலமொன்றின் போதே குண்டு வெடிப்பு இடம பெற்றது. (எ)

# சீன இராணுவ ஆணைக்குழு தலைவராக ஜியாங் செமின் தெரிவு

பீக்கிங், ஏப். 4

சீன கமயூனிஸ்ட் கட்சியின் தலைவர், ஜியாங செமின் தேசிய இராணுவ ஆணைக் குழுவின் தலைவராக பெரும பான்மை வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவர் சீனாவின் முன்னாள் பலவான் என்று கருதப்படும டெபில் சியாஓபிங்ஜின் வாரிசாவார். முன்னர் சீனத் தேசிய இராணுவத்தின் முப்படைத் தளபதியாகவும இவர் விளங்கினார்.

ஜியாங சென்ற வருடம நவமபரில் கட்சியின் மத்திய இராணுவ ஆணைக்குழுவின் தலைவராக இருந்தார்.

இவருக்குப் போதிய இராணுவ அனுபவம இல்லை- பதவியிறங்கிய டெங்கின் பக்கபலத்தை இன்னும சார்ந்து நிற்கிறார். டெங திரையின் பின்னாலிருந்து கொண்டே சீனாவின் கொள்கை வகுப்பாளருள் ஒருவராக இன்னும இயங்குகிறார். (எ-ரி)

## கலகம் நீடிப்பு

லண்டன், ஏப். 4

120 வருடம பழைமை வாய்ந்த பிரிட்டனின் ஸ்ரேன்ஜ்வே சிறைச்சாலையில் கடந்த ஞாயிறு தொடங்கிய அகோரமான சிறைச்சாலை கலகம இன்னும முடிந்தபாடாயில்லை.

சென்ற செவ்வாய்கிழமை கைதிகளுக்கும சிறைச்சாலைக் காவலருக்கும இடையில் இரண்டு மணித்தியால கைகலப்பு நடந்தது. அக்கலவரங்களில் 1000 கைதிகள் ஈடுபட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. (எ-ரி)

## 6 தொன் போதைபொருள் சிக்கியது

இஸ்லாமாபாத், ஏப். 4

பாகிஸ்தான் சுங்க அதிகாரிகள் செவ்வாயன்று நடத்திய சோதனையொன்றில் ஒரு வாகனத்திலிருந்து 06 தொன்னுக்குமதிக கானாபிஸ் என்ற போதைப் பொருளைக் கைப்பற்றினர்.

இன்னுமொரு சோதனையில் பிறிதோர் இடத்தில் இருந்து சுங்க அதிகாரிகள் 380 கிலோ ஹெரோயினைக் கண்டுபிடித்தனர்.

கடந்த வருடம பாகிஸ்தானிய அதிகாரிகள் 8.5தொன் ஹெரோயினைக் கைப்பற்றியிருக்கிறார்கள்

போதைப் பொருள் கடத்தலால் பாகிஸ்தான் மக்கள் சுமார் 700,000 பேர் அடிமையாகி உள்ளனர். இவர்கள் ஆண்டொன்றிற்கு 50 தொன் போதைப் பொருளை உபயோகிக்கிறார்கள் (எ-ரி)

# எரிக்ஹொனெக்கர் ஆஸ்பத்திரியில்

கிழக்கு பேர்லின், ஏப். 4

ஜனனாயக சார்பு எதிர்ப்புகளால் அவமானப் படுத்தப் பட்டு பதவியிலிருந்து தூக்கி எறியப்பட்ட கிழக்கு ஜெர்மன் ஆட்சியாளர் எரிக் ஹொனெக்கர் சுகவீனம காரணமாக ரஷ்யாவில் பொட்ஸ்டாம இராணுவ ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

கூடவே அவர் மனைவியும சென்றுள்ளார்.

கடந்த ஜனவரியில் ஹொனெக்கர் சிறுநீரக சத்திர சிகிச்சையொன்றுக்கு உட்படுத்தப்பட்டார். சிறுநீரகங்களில் இருந்த கட்டியொன்று அப்போது அகற்றப்பட்டது.

இவர் மீதும இவரோடு மற்றும 10 பேர் மீது சாட்டப்பட்டுள்ள குற்றங்களை விசாரிக்க முடியாத நிலையேற்பட்டிருக்கிறது. வயதில் மூத்திருப்பதால் அனைவரும நோயுற்றிருக்கிறார்கள். இரகசியப் பொலீஸ் தலைவர் கூட இந்நிலையிலே இருக்கிறார். இவரைத் தொடர்ந்து விசாரித்தால் இவர் தற்கொலை செய்து கொள்ளலாம எனவும அச்சமேற்பட்டுள்ளது. (எ-ரி)

# சாராய குதாம் முற்றுகை

## சந்தேக நபர்கள் நால்வரும் கைது

கொழும்பு ஏப் 4

ஜா-எலயில் சட்ட விரோதமான முறையில் இயங்கி வந்த சாராயக் குதாம ஒன்று பொலீஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டது-

தொளாயிரத்திற்கும அதிகமான சாராயம நிரப்பப்பட்ட போத்தல்களும பல ஆயிரக்கணக்கான போலி லேபல்களும இங்கு கைப்பற்றப்பட்டன-

பொலீஸ் போதை தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் பேரிலேயே பொலீஸார் சாதாரண சிவில் உடையில் சென்று மேற்படி சாராயக் குதாமை முற்றுகையிட்டனர்-

ஜா-எல நகருக்கு அப்பால் பின் தங்கிய பகுதியில் மூடப்பட்டுள்ள தொழிற்சாலை ஒன்றிலேயே இந்த சட்ட விரோத சாராயக் குதாம இயங்கி வந்துள்ளது-

இந்த இடத்தை சுற்றி வளைத்த பொலீஸார் அங்கு நான்கு சந்தேக நபர்களையும கைது செய்துள்ளனர்-

மேற்படி சட்ட விரோத சாராயக் குதாம பல வருடங்களாக அங்கு இயங்கி வந்துள்ளது-

இங்கு சட்ட விரோதமான முறையில் தயாரிக்கப்பட்ட சாராயம அரச வடிசாலைகளில் தயாரிக்கப்படும சாராய லேபல்கள் ஒட்டப்பட்டு சுற்று வட்டாரத்தில் உள்ள மதுபான விற்பனை நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ள தெனவும விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது-

இப்படி பொலீஸ் அத்தியட்சகர் திரு என்டன் ஜயரத்னே கூறினார்- [ல-ய]

## பஞ்சரதபவனி

கொழும்பு, ஏப் 4

கண்டி, ஸ்ரீ செல்வ விநாயகர் கோவில் பஞ்ச ரத பவனி எதிர்வரும 7ஆம திகதி சனிக்கிழமை நடைபெறும.

அன்றைய தினம காலை 9 மணி முதல் விசேஷ அபிஷேகம, தீபாராதனை என்பனவும மாலையில் விசேஷ மேளக் கச்சேரியுடன். வசந்த மண்டப பூஜையும. இரவு 10 மணிக்கு பஞ்சரத பவனியும இடம்பெறும.

மறுநாளான 8ஆம திகதி காலை தீர்த்தோற்சவமும, நண்பகல் மகேஸ்வர பூஜையும நடைபெறும. இரவு புஷ்ப பல்லாக்குடன் விழா பூர்த்தியடையும. (ஐ-ர)

# முல்கிரிகல இடைத்தேர்தல்

## ஆட்சேப மனு வாபஸ்

கொழும்பு, ஏப் 4

முல்கிரிகல இடைத் தேர்தலை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட இரண்டாவது மனு வாபஸ் பெறப்பட்டது. இதற்கான அனுமதியை உயர் நீதிமன்றம வழங்கியது.

முல்கிரிகல இடைத் தேர்தல் 85 ஆம ஆண்டு செப்டம்பர் மாதம 12 ஆம திகதி நடந்தது.

ஐ தே கவைச் சேர்ந்த கே ஆனந்தகுலரட்ன இத்தேர்தலில் வெற்றி பெற்றார்.

இதை ஆட்சேபித்த வீரகெட்டியாவைச் சேர்ந்த கருணாதாச சமரசிங்க திசநாயக்கா வழக்குத் தொடர்ந்தார்.

அவர் தனது மனுவில் முல்கிரிகல முன்னாள் எம பி கே ஏ குலரட்ன. தெஸ்பாவ முன்னாள் எம பி காமினி லொக்குகே, மகர முன்னாள் எம பி கே ஜெயக்கொடி, கட்டுகமபொல முன்னாள் எம பியும முன்னாள் குருநாகல் மாவட்ட அமைச்சருமான காமினி ஜெயவிக்கிரம பெரேரா.

பெலியத்த முன்னாள் எம பியும முன்னாள் சுகாதார அமைச்சருமான ரஞ்சித் அத்தபத்து ஆகியோரை பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டிருந்தார்.

சூழ்நிலை மாற்றங்களால் தமது மனுவை வாபஸ்பெற விரும்புவதாக மனுதாரர் தெரிவித்தார்.

இதை நீதியரசர்கள் ஏ. ஜி டி சில்வா, திஸ்ஸ பண்டாரநாயக்கா, ரஞ்சித் தீரரட்ன ஆகியோர் ஏற்றுக் கொண்டனர்.

மனுதாரர் சார்பில் சட்டத்தரணி நிமால் சிறிபால டி சில்வா ஆஜரானார். (ல-தூ)

# கஷ்ட பிரதேச பாடசாலை பற்றி மதிப்பீட்டு அறிக்கை

## நடத்துமாறு கல்வி அமைச்சு உத்தரவு

கொழும்பு, ஏப் 4

கஷ்டப் பிரதேச பாடசாலைகளின் நிலைகுறித்து உடனடியாக மதிப்பீடுகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

கல்வி அமைச்சு சகல பிராந்திய கல்விப் பணிப்பாளர்களுக்கும் இவ்வாறு உத்தரவிட்டுள்ளது.

கஷ்டப் பிரதேச பாடசாலைகள் குறித்து ஐந்து வருடங்களுக்கு முன்னர் மதிப்பீடு ஒன்று நடத்தப்பட்டது. அதன் பின்னர் மதிப்பீடு எதனையும் கல்வி அமைச்சு நடத்தவில்லை.

கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை, தளபாட தட்டுப்பாடு போன்றவை நிலவுவதாகவும், இதனை கவனிப்பார், ஒருவரும் இல்லை என கல்வி அமைச்சுக்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன,

பிரஸ்தாப முறைப்பாடுகளைத் தொடர்ந்தே மதிப்பீடு நடத்துமபடி கல்விப் பணிப்பாளர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கஷ்டப் பிரதேச பாடசாலைகளின் அபிவிருத்திக்கு உதவ பல வெளிநாட்டு நிறுவனங்கள் முன் வந்துள்ளன.

மதிப்பீடு முடிவடைந்ததும இந்த நிறுவனங்களின் உதவி பெற்று அவ்வாறான பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படும். என்றும அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ஐ-மு)

# போலி 500 ரூபா நோட்டை மாற்ற முயன்றாராம்

## நபர் விளக்க மறியலில்

கொழும்பு, ஏப் 4

500 ரூபா போலி நோட்டு ஒன்றை ம போ சபை பஸ் கண்டக்டரிடம மாற்றிய பிரஜை ஒருவர் இமமாதம் 6 ஆம திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டார்—

நீர்கொழும்பு ம போ ச டிப்போவுக்கு சொந்தமான பஸ்ஸில் ஏறிய சந்தேக நபர், பஸ் கண்டக்டரிடம போலி 500 ரூபாவை கொடுத்து மாற்றியுள்ளார்—

கண்டக்டர் தனது கடமை முடிந்து டிப்போவுக்குச் சென்று நிதியை ஒப்படைக்கும போதே 500 ரூபா பண நோட்டு, போலியானது என தெரிய வந்தது—

இதனையடுத்து மேற்படி பஸ் கண்டக்டர் இது தொடர்பாக நீர்கொழும்பு பொலீஸில் முறைப்பாடு செய்தார்—

இந்த முறைப்பாட்டை அடுத்து நீர்கொழும்பு பொலீஸார் சந்தேக நபரை கைது செய்து நீர்கொழும்பு பதில் மாஜிஸ்திரேட் திரு எம ஜே என் ரூ எப் திசேரா முன்னிலையில் ஆஜர் செய்தனர்—

பதில் மாஜிஸ்திரேட் சந்தேக நபரை இமமாதம் 6 ஆம திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்— (ஐ-வ்)

# மக்களும் பதவியும்

## பத்திரிகையாளர் சங்க செயலாளர்

சென்னை, ஏப் 4



சென்னையிலுள்ள அனைத்திந்திய பத்திரிகையாளர்களின் பரமபரையான சென்னை பத்திரிகையாளர் சங்கத்தின் இணைச் செயலாளராக திரு எஸ் எம கார்மேகம தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அனைத்திந்திய பத்திரிகையாளர் சங்கத்தின் சென்னை பிரிவான இந்த சங்கத்தின் நடப்பாண்டு நிர்வாகிகள் தனித் தேர்தல் அதிகாரிகள் முன் சென்னை, மதுரை முதலிய நகரங்களில் நடைபெற்றன.

இலங்கையைத் தாயகமாகக் கொண்டவர். திரு எஸ் எம கார்மேகம முன்னாள் வீரகேசரி ஆசிரியர் பகுதியில் நீண்ட காலமபணியாற்றியவர், இப்போது தினமணி நாளேட்டின் ஆசிரியர் பகுதியில் பொறுப்பான பதவி வகித்து வருகிறார்.

(ஐ-ங)

# மனைவியையும் மகள்மார் இருவரையும் வெட்டிக் கொன்றாராம்

## குடும்பஸ்தருக்கு 30 வருட சிறை

கொழும்பு ஏப் 4

தனது மனைவியையும மகள்மார் இருவரையும மன்னா கத்தியால் வெட்டிக் கொலை செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட குடுமபஸ்தர் ஒருவருக்கு 30 வருட சிறைதண்டனையும 6 ஆயிரம ரூபா அபராதமும விதிக்கப்பட்டது—

மாத்தறை மேல் நீதிமன்ற நீதிவான் திரு டீ ஜயவிக்கிரம இந்த சிறைத்தண்டனையையும அபராதத்தையும விதித்தார்—

பிரதிவாதி (குற்றவாளி) அபராதத் தொகையை செலுத்தத் தவறினால் மேலும 6 வருட சிறைதண்டனை அனுபவிக்க நேரிடும என்றும நீதிவான் மேலும தெரிவித்தார்—

1975 ஆம ஆண்டு மார்ச் மாதம 15 ஆம திகதியளவில் மின்தெனிய பொலீஸ் பிரிவைச் சேர்ந்த லீலாவதி (தாய்), கந்தகே குணவதி (மகள்) — கந்தகே ஞானவதி (மகள்) ஆகிய மூவரையும வெட்டிக் கொலை செய்தார் என்ற குற்றஞ்சாட்டின் பேரிலேயே இவருக்கெதிராக வழக்கு தொடரப்பட்டது—

(ஐ—வ)



## குழாய்நீர் விநியோகம்

பேருவளை சீனன்கோட்டை அல்ஹுமைஸரா மத்திய கல்லூரிக்கான குழாய் நீர் விநியோகம ஆரமபித்து வைக்கப்பட்டது.

பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இளைஞர் விவகார விளையாட்டு அமைச்சர் திரு நந்தா மெத்தியூ, வீடமைப்பு ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் இமதியாஸ் பாக்கீர் மாக்கார் மேல் மாகாண அமைச்சர் ஜனாப் ஏ எம யூசுப் உட்பட பிரமுகர்கள் பாடசாலை மாணவர்களால் வரவேற்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம.

பேருவளை நகர எழுச்சி பிரதேச எழுச்சி திட்டத்தின் கீழ் இது மேற்கொள்ளப்பட்டது.

(ஐ-007)

# விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

திருகோணமலை, ஏப் 3

வடக்கு. கிழக்கு மாகாண காணி. விவசாய அமைச்சு சர்வோதயத்துடன் இணைந்து விவசாயிகளுக்கான வதிவிடப் பயிற்சி முகாம ஒன்றை எதிர்வரும் இருபத்து மூன்றாம திகதி தொடக்கம மூன்று வாரங்களுக்கு நடத்த உள்ளதாக அமைச்சின் பதில் செயலாளர் கலாநிதி என் விக்னராசா தெரிவித்தார்—

[illegible]

என் விக்னராசா தெரிவித்தார்—

(ஐ-288)

# பரீட்சையில் சித்தி

இராகலை, ஏப் 3



கடந்த ஆண்டு நடைபெற்ற ஆண்டு ஐந்திற்கான புலமைப் பரிசில் பரீட்சையில் நு-எனிக் தமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன் செல்வன் ந விஜயானந்தன்னார்.

ருபஹா கொத்தணியிலேயே சித்தி அடைந்துள்ள ஒரேயொரு மாணவனான விஜயானந்தனை மேற்படி பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் பாராட்டி பரிசில்கள் வழங்கி கௌரவித்துள்ளனர்.

(ஐ-265)

# பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் பெற்றோர் அக்கறை தேவை

## பாராட்டு விழாவில் அபுசாலி

பலாங்கொடை, ஏப் 3

"மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெற்றோர் கூடிய கவனம செலுத்த வேண்டும. பிள்ளைகளின் கல்வி விடயத்திலே மிகவும அக்கறையுடன் பெற்றோர்கள் செயலபட வேண்டும. ஜெய்லானி மத்திய கல்லூரியிலே

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும, தோட்டத் தொழிற்துறை ராஜாங்க அமைச்சருமான அல்ஹாஜ் எம எல் எம அபுசாலி குறிப்பிட்டார். அவர் மேற்கண்டவாறு பலாங்கொடை ஜெய்லானி மத்திய கல்லூரியிலே நடைபெற்ற "பாராட்டு விழா" வைபவத்

# ரூ. 10 லட்சம் பெறுமதி கஞ்சா சிக்கியது

## பெண் ஒருவர் கைது

கொழும்பு, ஏப் 4

சுமார் பத்து லட்சம ரூபா பெறுமதியான கஞ்சாவை அத்துருகிரிய பொலீஸார் கைப்பற்றினர். பெண் ஒருவரும கைது செய்யப்பட்டார்.

அத்துருகிரிய பொலீஸ் பிரிவைச் சேர்ந்த ஹோகந்தர பகுதி வீடொன்றை பொலீஸார் திடீர் முற்றுகையிட்டனர். அவ்

...களும இயங்கியதா?' என்பது குறித்து அத்துருகிரிய பொலீஸார் மேல் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ-வ)

# வசந்த கால மலர் கண்காட்சி

# பணம், நகைகள் கொள்ளை

கொழும்பு, ஏப் 3

ஆயுதம தாங்கிய நபர்கள் இருவர் கமபஹா பிரதேசத்தில் உடகமபொல என்னும இடத்தில் சுனில் குணவர்த்தன என்பவரின் வீட்டிலிருந்து ரொக்கப் பணத்தையும நகைகளையும கொள்ளையடித்துச் சென்றனர்.

அரசு நேற்று விடுத்துள்ள அறிக்கையில் இச்சமபவம தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும தெரிவிக்கப்பட்டிருப்பதாவது—

தீவிரவாத சந்தேக நபர்

# ஹொக்கி சங்க நிர்வாகிகள்

வேண்டும். பிள்ளைகளின் கல்வி விடயத்திலே மிகவும் அக்கறையுடன் பெற்றோர்கள் செயல்பட வேண்டும். ஜெய்லானி மத்திய கல்லூரியிலே சித்தியடைந்த மாணவர்களின் பாராட்டு விழாவிற்கு அவர்களது பெற்றோர் சமூகமளிக்காமை வியப்பை அளிக்கின்றது.

இவ்வாறு இரத்தினபுரி

## கஞ்சா தூள் கைப்பற்றப்பட்டது

கொழும்பு, ஏப் 3

லொறியொன்றில் எடுத்துச் செல்லப்பட்ட சுமார் இரண்டாயிரத்து 500 கிலோ எடை கொண்ட கஞ்சா தூளை அதிரடிப் படையினர் கைப்பற்றினர்.

மொனராகலையில் இருந்து எடுத்துச் வரப்பட்ட இந்த கஞ்சாத்தூள் மரக்கறி சாக்குகளில் வைக்கப்பட்டிருந்தது.

சந்தேகத்தின் பேரில் தனமல்விலையில வைத்து லொறியை நிறுத்தி படை வீரர்கள் சோதனையிட்ட போதே இந்த கஞ்சாக் கடத்தல் வெளிச்சத்துக்கு வந்தது.

இதையடுத்து லொறி சாரதியும் மேலும் இருவரும் கைது செய்யப்பட்டு மேல் விசாரணைக்காக பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

வெளிநாட்டுக்கு கடத்திச் செல்லும் பொருட்டே கஞ்சாவை கடத்தல்காரர்கள் தூள் செய்திருக்க வேண்டுமென பொலீஸார் கருதுகின்றனர்.

இக்கடத்தல் முயற்சியின் சூத்திரதாரியைக் கண்டு பிடிக்கும் வகையில் விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

(ல-032)

அபுசாலி குறிப்பிட்டார். அவர் மேற்கண்டவாறு பலாங்கொடை ஜெய்லானி மத்திய கல்லூரியிலே நடைபெற்ற "பாராட்டு விழா" வைபவத்திலே குறிப்பிட்டார்.

தொடர்ந்து ராஜாங்க அமைச்சர் அபுசாலி பேசுகையில்,

"இரத்தினபுரி மாவட்டத்திலேயே இம்முறை ஜெய்லானி மத்திய கல்லூரியில் இருந்து 9 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ளமை எனக்கு மகிழ்ச்சியை அளிக்கின்றது.

இவர்களின் சித்திக்கு இக்கல்லூரியின் ஆசிரியர்கள் அதிகளவு அக்கறை எடுத்து மாலை நேர வகுப்புக்களை நடத்தியமையிட்டு ஆசிரியர்களுக்கும் நன்றி கூற வேண்டும்" என்றார்.

(ஐ-038)

வரும் கைது செய்யப்பட்டார்.

அத்துருகிரிய பொலீஸ் பிரிவைச் சேர்ந்த ஹோகந்தர பகுதி வீடொன்றை பொலீஸார் திடீர் முற்றுகையிட்டனர். அவ்வேளை 35 சாக்குகளில் அடைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான கஞ்சாவை பொலீஸார் கைப்பற்றினர்.

சந்தேகத்துக்குரிய பெண் கஞ்சாவை துண்டுதுண்டாக வெட்டிக் கொண்டிருந்த போதே பொலீஸார் அவரை கைது செய்தனர்.

நீண்ட காலமாக அநுராதபுரம், எம்பிலிபிட்டிய ஆகிய பகுதிகளில் இந்த கஞ்சா வியாபாரம் கள்ளத்தனமாக மேற்கொள்ளப்பட்டு வந்ததாகவும் பொலீஸ் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த கஞ்சா விற்பனையின் பின்னணியில் வேறு பல சக்தி

# களனி பல்கலையில் 2 கைக் குண்டுகள்

கொழும்பு, ஏப் 4

களனி பல்கலைக்கழக மலசல கூடத்திலிருந்து சிறிய அளவிலான இரண்டு குண்டுகள் கண்டெடுக்கப்பட்டன.

பல்கலைக்கழக மாணவர் ஒருவரே பல்கலைக்கழக மலசலகூடத்தில் பொதியில் போடப்பட்டிருந்த இந்த இரண்டு குண்டுகளையும் முதலில் கண்டுள்ளார்.

பொதியினை மாணவன் வெளியே எடுத்துப் பார்த்த போது அதனுள் இரண்டு குண்டுகள் காணப்பட்டன. உடனே பல்கலைக்கழக நிர்வாகிகள் இது குறித்து பொலீஸாருக்கு அறிவித்தனர்.

பொலீஸார் அங்கு வந்து 2 குண்டுகளையும் கைப்பற்றினர்.

இந்த இரண்டு குண்டுகளும் சில மாதங்களுக்கு முன்னரே இங்கு மறைத்து வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

பொலீஸார் இச்சம்பவம் தொடர்பாக பலரை விசாரணைக்குட்படுத்தினர்.

இதேவேளை மேற்படி பல்கலைக்கழக வளவு முழுவதும் சோதனையிடப்பட்டது. (ண—வ)

## வசந்த கால மலர் கண்காட்சி

நுவரெலியா ஏப் 3

நுவரெலியா வசந்தகால மலர் கண்காட்சி ("ஏப்ரல் புளூமஸ் 1990") எதிர்வரும் 9ஆம் 10ஆம் திகதிகளில் "சினிசிட்டா" உள்ளரங்கில் நடைபெறும்.

9ஆம் 10ஆம் திகதிகளில் மாலை யப்பானிய திரைப்படம் திரையிடப்படும்.

இந்நிகழ்ச்சிக்கு பிரதம அதிதிகளாக திருமதி ஹேமா பிரேமதாச, சுகாதார அமைச்சர் திருமதி ரேணுகா ரணவீர,

திரு காமினி திசாநாயக்க திருமதி சிறிமா திசாநாயக்க ஆகியோர் கலந்து கொள்வர்.

(ஐ-412)

அரசு நேற்று விடுத்துள்ள அறிக்கையில் இச்சம்பவம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது—

தீவிரவாத சந்தேக நபர் ஒருவரின் தகவலை அடுத்த பாதுகாப்புப் படையினர் பின்வரும் பொருட்களை கைப்பற்றி உள்ளனர்.

ஐந்து தன்னியக்க துப்பாக்கிகள், மூன்று பன்னிரண்டு துளை துப்பாக்கிகள், ஒரு தன்னியக்க துப்பாக்கி சுத்திகரிப்பு ஆயுதப் பெட்டி ஆகியவையே கைப்பற்றப்பட்டவையாகும். இச்சம்பவம் பதுளையில் இடம்பெற்றுள்ளது.

மொனராகலை பிரதேசத்தில் உள்ள ஒக்கம்பிட்டிய, கவிறம்பிகமுவ, தரல்ல, கிங்குராக்கடுவ என்னும் இடங்களை சுற்றி வளைத்த தேடுதல் நடத்தியதில் எட்டு தீவிரவாத சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

(ந-404)

[illegible]

என் விக்னராசா தெரிவித்தார்—

(ஐ-288)

## நெல் கொள்வனவு நடவடிக்கை

தம்பலகாமம், ஏப் 3

நெல் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளை நெல் சந்தைப்படுத்தும் சபை இங்கு ஆரம்பித்துள்ளது—

இதற்குரிய துரித நடவடிக்கைகளை பிராந்திய முகாமையாளர் திரு என் மகேந்திரன் மேற்கொண்டுள்ளார்—

வெள்ளை நெல் கிலோ ஒன்று 6 ரூபா 50 சதத்திற்கு சபையால் கொள்வனவு செய்யப்படும்— உடனுக்குடன் பணம் [illegible] செய்யப்பட்டுள்ளன— (ஐ-288)

## ஹொக்கி சங்க நிர்வாகிகள்

பதுளை, ஏப் 3

ஊவா ஹொக்கி சங்க வருடாந்த கூட்டத்தில் பின்வருமாறு நடப்பு வருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்— திரு எம டி உஸ்மான், உபதலைவர்கள்— திருவாளர்கள் கே விஜேதாஸ சொய்சா, சு தே ரட்னாயக்க.

செயலாளர்— திரு டி எம சராப், உப செயலாளர்— திரு கே கணகசுந்தரம்.

பொருளாளர்— திரு பி ஜே ஹெட்டியாராச்சி, உபபொருளாளர்— திரு ஆர் எம கஜேந்திரன்.

கணக்காளர்— திரு டி எச் சி சாலே.

(ஐ-037)

## தேசிய இளைஞர் மன்ற நிர்வாகிகள்

அக்குறணை, ஏப் 3

அக்குறணை மல்வானஹின்ன கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தேசிய இளைஞர் சேவை மன்ற அனுசரணையுடன் ஸியா இளைஞர் கழகம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

தலைவர்— செல்வன் எம எச் எம பாஸில், உபதலைவர்— செல்வன் எம எம முஹாஜிரீன்.

செயலாளர்— செல்வன் எம எம ஸுபர், உபசெயலாளர்— செல்வன் ஏ எம எப் அமீன் பொருளாளர்— செல்வன் எம ஐ எம நிஜாமதீன். (ஐ-411)

# சுய வேலை வாய்ப்புக்கு

## திருமலை எம். பிக்கள் நிதி ஒதுக்கீடு

திருகோணமலை ஏப் 3

திருகோணமலை மாவட்டத்தின் அபிவிருத்திக்காகவும் சுயவேலை வாய்ப்பை ஏற்படுத்தும் நோக்கிலும் பன்முக வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர்களான திரு சி இரட்ணராஜா ஜனாப் அ பசீர் அமீர் ஆகியோர் நிதி ஒதுக்கீடு செய்துள்ளனர்—

1939ஆம் ஆண்டிற்கான பன்முக வரவு செலவு திட்ட நிதியிலிருந்து பின்வரும் அபிவிருத்திகளுக்காக நிதி வழங்கப்பட்டுள்ளது—

திருகோணமலை தள ஆஸ்பத்திரியின் பிரசவவார்ட்டை நவீனமயப்படுத்துவதற்கு 50 ஆயிரம் ரூபாவும் ஈச்சிலம்பத்தை கும்புறுபிட்டி ஆகிய கிராமங்களில் சுகாதார நிலையங்களை அமைப்பதற்கு தலா 3 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன—

குடி தண்ணீர் வசதியை ஏற்படுத்தும் நோக்குடன் கல்லம்பத்தை கிரியாய் மூதூர் தொகுதியிலுள்ள பூநகர் விநாயகபுரம் முலக்குந்தை கவாட்டிக்குடா நீற்றமை பேராறு தம்பலகாமம் கல்லூர் பாட்டாளிபுரம், மொறவேவா - மட்டப்புகள ஆகிய கிராமங்களில் கிணறுகளை அமைப்பதற்கு ஒவ்வொரு கிராமத்துக்கும் தலா 35 ஆயிரம் ரூபா வீதமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது

கவாட்டிக்குடாவில் இரு கிலோ மீற்றர் தூரத்திற்கு புதிய வீதியை அமைப்பதற்கு 1½ லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது—

இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டத்தினை ஏற்படுத்தும் நோக்கில் சனசமூக அபிவிருத்திக்கென 10 லட்சம ரூபாவை திருகோணமலை மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ளது எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்— (ஐ—287)

### 24 வயதுக்குக் கீழ்ப்பட்ட

# ஹொங்கொங்கின் நகர் அணி வருகிறது

## நான்கு போட்டிகளுக்கு ஏற்பாடு

கொழும்பு ஏப் 4

ஹொங்கொங் இளைஞர் நகர் அணி எதிர்வரும் 18 ஆம் திகதி இலங்கை வருகிறது. இலங்கையில் மேற்படி அணியினர் நான்கு ஆட்டங்களில் ஈடுபடுவர்.

24 வயதுக்குக் கீழ்ப்பட்ட வீரர்களைக் கொண்ட மேற்படி ஹொங்கொங் நகர் அணியை எதிர்க்கும் பொருட்டு ஏற்கனவே 68 பேர் கொண்ட பயிற்சிக் குழுவொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து நடத்தப்படும் பயிற்சி ஆட்டங்களின் பின்னர் இக்குழுவில் இருந்து 35 வீரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

ஹொங்கொங் இலங்கை வீரர்களுக்கிடையிலான முதல் இரண்டு ஆட்டங்கள் கொழும்பு ப்லாஸ்டன் மைதானத்தில் நடத்தப்படும். இங்கு ஏப்ரல் 21 மற்றும் 27 ஆம் திகதிகளில் இரு சர்வதேச ஆட்டங்கள் நடத்தப்படும்.

எதிர்வரும் 23 ஆம் திகதியும் 25 ஆம் திகதியும் ஏனைய இரண்டு ஆட்டங்களும் நடத்தப்படும்,

எதிர்வரும் அக்டோபர் மாதம் 12 ஆவது ஆசியாட் நகர் போட்டி இங்கு நடைபெறவுள்ளது, இப்போட்டிக்குத் தேவைப்படும் அனுபவத்தையும் ஆற்றலையும் 23, 25 ஆம் திகதிகளில் நடைபெறும் போட்டிகளின் மூலம் இலங்கைவீரர்கள் பெற்றுக் கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

(எ-032)

## ஒலிம்பிக் போட்டி: அரசியல் கலப்பு இருத்தல் கூடாது

— ஜோர்ஜ்புஷ்

அட்லாண்டா, ஏப் 4

உலகின் முன்னணி விளையாட்டுப் போட்டிகளில் அரசியல் கலக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும், ஒலிம்பிக்கில் அரசியல் கலப்பு இருக்கக் கூடாது என்பதே என் விருப்பம்.

அட்லாண்டா நகரில் ஒலிம்பிக் அதிகாரிகளைச் சந்தித்த அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் இவ்வாறு தனது கருத்தைத் தெரிவித்தார்.

1996 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியை ஏற்று நடத்தும் உரிமையைக் கோரி அமெரிக்காவின் அட்லாண்டா நகரம் உட்பட ஏதென்ஸ், மெல்பேர்ன் (ஆஸ்திரேலியா) டொரண்டோ (கனடா) ஆகிய நகரங்களும் போட்டியில் இறங்கியுள்ளன.

இப்போட்டி அட்லாண்டாவில நடத்தப்படுவதற்கு ஜனாதிபதி புஷ் ஆதரவு தெரிவித்து இங்கு உரை நிகழ்த்தினார்.

ஆப்கானிஸ்தான் விவகாரத்தையடுத்து 1980 ஆம் ஆண்டு மாஸ்கோ ஒலிம்பிக் போட்டியை அமெரிக்கா பகிஷ்கரித்தது. பதிலடியாக 1984 ஆம் ஆண்டு லொஸ்ஏஞ்ஜலிஸ் ஒலிம்பிக்கை ரஷ்யா பகிஷ்காரம் செய்தது.

1996 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி எந்நாட்டில் நடத்தப்படும் என்ற தீர்மானம் எதிர்வரும் செப்டம்பர் 18 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும். (எ-032)

## சமமாக முடிந்த கிரிக்கெட் ஆட்டம்

மடவளை, ஏப் 3


மடவளை மதீனா கம்பளை ஸாஹிரா கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது,

அண்மையில் கம்பளை ஸாஹிராக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மேற்படி கிரிக்கெட் போட்டியில் மதீனா மத்திய கல்லூரி முதலாம் இன்னிங்சில் 207 ஓட்டங்களையும் ஸாஹிராக் கல்லூரி 66 ஓட்டங்களையும் பெற்றன,

ஸாஹிராக் கல்லூரி இரண்டாம் இன்னிங்சில் 9 விக்கெட் இழப்பிற்கு 134 ஓட்டங்களைப் பெற்றது. பின்னர் நேரம் இன்மையால் போட்டி இடை நிறுத்தப்பட்டது.

(எ-ரி-431)

## விளையாட்டு பகுதி



**வெற்றிக்கிண்ணம் பரிசு**

யாழ், வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மெய் வல்லுநர் போட்டி கல்லூரி அதிபர் திரு சி டாஸ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது,

இப்போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு து. வைத்திலிங்கத்திடமிருந்து செல்வி க குலசூரியன் சாம்பியனுக்கான வெற்றிக் கிண்ணத்தை பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம்.

[படம்- என் கே தங்கரத்தினம்]

(எ-283)

### நிவ்ஸ்டார் வெற்றியீட்டியது

புத்தளம் ஏப் 3

விளையாட்டுத் துறை அமைச்சின் அனுசரணையுடன் புத்தளம் உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கிடையே நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி புத்தளம் நகரில் நடைபெற்றது,

பிரபல கழகங்களான புத்தளம் நிவ்ஸ்டார் கழகமும், புத்தளம் திறீஸ்டார் கழகமும் இந்த மோதலில் கலந்து கொண்டன.

இரு கோஷ்டிகளும் தலா ஒரு கோல் வீதம் போட்டு இருந்தபடியால் மத்தியஸ்தர் இரு கோஷ்டிகளுக்கும் இரு முறை தலா மூன்று கோல்கள் பெனால்டி மூலம் அடிப்பதற்கு சந்தர்ப்பம் கொடுத்தார். அதில் நிவ்ஸ்டார் கோஷ்டி ஒரு மேலதிக கோலினால் வென்றது.

(ரி-241)

### உலககிண்ண உதைபந்து — இத்தாலி வெற்றியீட்டும் அணியில் ஒவ்வொரு வீரருக்கும் தலா 2 லட்சம் டாலர்கள் பரிசு

ரோம, ஏப் 4

எதிர்வரும் ஜூன் எட்டாம் திகதி இத்தாலியில் ஆரம்பமாகும் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் அந்நாட்டு தேசிய அணி வெற்றியீட்டுமானால் அணியைச் சேர்ந்த ஒவ்வொரு வீரருக்கும் இரண்டு லட்சத்து 40 ஆயிரம் டாலர்கள் சன்மானமாக வழங்கப்படும்.

இத்தாலிய உதைபந்தாட்ட சங்கம் இப்படி அறிவித்துள்ளது.

இத்தாலி இதுவரை கௌரவம் மிக்க இக்கிண்ணத்தை மூன்று தடவைகள் கைப்பற்றியுள்ளது,

1934, 1938 மற்றும் 1982 ஆம் ஆண்டுகளில் உலகக் கிண்ணத்தை உரிமையாக்கிக் கொண்ட இத்தாலிய தேசிய அணி எதிர்வரும் போட்டியில் இறுதி வெற்றியீட்டுமானால் வீரர்களுக்கு சன்மானமாக வழங்கவென பல கோடி லீரா ஏற்கனவே ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது; (எ-032)

## விமான சேவைகள்

ஏப்ரல் 5 (வியாழக்கிழமை)

மாலைதீவு டி எப் 3540

## வானொலி

5-4-1990

சில்லையூர் செல்வராஜன்

7-00 திருக்குர்ஆன் விளக்கம் வழங்குபவர்- மௌலவி ஏ சி எல் எம செயின்

7-15 மணிமொழிகள் வழங்குபவர்- மௌலவி எம எம அலி அக்பர்

7-00 வர்த்தகசேவை

7-45 மாதாணச் செய்திகள்

7-50 வர்த்தக சேவை

8-00 வாத்திய மஞ்சரி

8-15 மெல்லிசைப் பாடல்கள்

8-30 உறுத மஞ்சரி

மௌலவி எம கியூ பூர்

## டெலிவிஷன்

தினபதி

வார இதழ் "சிந்தாமணி" ஞாயிறுதோறும் வெளிவரும்

# மலையக தோட்டங்களில் இளைஞர் மன்ற உபகிளைகள்

கொழும்பு, ஏப்- 4

மலையகத்தில் அனைத்து தோட்டங்களிலும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உப கிளைகள் உருவாக்கப் படும்.

இதன் மூலம் தேசிய ரீதியாக நடைபெறும் பொது நிகழ்ச்சிகளிலும், தேசிய விழாக்களிலும் மலையக இளைஞர்களுக்குப் போதிய இடம் பெற்றுக் கொடுக்க முடியும்.

இவ்வாறு தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பணிப்பாளர் திரு கே வேலாயுதம் கூறினார்.

இளைஞர் விவகார, விளையாட்டுத் துறைகள் அமைச்சர் திரு நந்தா மெத்தியு, ஊவா மாகாண சபை உறுப்பினரும், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் கல்வி இயக்குநருமான திரு வேலாயுதத்தை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர்களுள் ஒருவராக நியமித்துள்ளார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இளைஞர்கள் மத்தியில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள், சுய தொழில் திட்டங்கள், கடனுதவித் திட்டங்கள் என்பனவற்றை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

ஆனால் இந்த வாய்ப்புகள் தோட்டப்புற இளைஞர்களுக்கு கிடைப்பதில்லை.

எனவே எல்லா தோட்டங்களிலும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உப கிளைகளை அமைத்து அவற்றின் மூலம் தோட்டப்புற இளைஞர்களுக்கும் மேற்படி வசதிகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இது தொடர்பான சுற்றறிக்கைகள் தோட்டக் கமிட்டித் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என திரு வேலாயுதம் மேலும் கூறினார்.

(ந-ய)

## கல்வி அமைச்சு நடவடிக்கைகள் இனிமேல் தமிழிலும்

கொழும்பு, ஏப்- 4

கல்வி அமைச்சின் சகல நடவடிக்கைகளும் இனிமேல் தமிழ் மொழியிலும் இடம் பெறும்.

இதனை செயல்படுத்துவதற்கான பொறுப்புகள் கல்வி



இராஜமனோகரி புலேந்திரன்

ராஜாங்க அமைச்சர் திருமதி இராஜமனோகரி புலேந்திரனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

திருமதி புலேந்திரன் திங்கட்கிழமை கல்வி அமைச்சுக்கு விஜயம் செய்து பணிகளைப் பொறுப்பேற்றார்.

கல்வி, உயர் கல்வி அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி அவரை வரவேற்று கல்வி அமைச்சின் சீரமைப்பு தொடர்பாக நீண்ட நேரம் உரையாடினார்.

தமிழ் மொழியும் அரச கரும மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ள போதிலும் கல்வி அமைச்சின் நடவடிக்கைகள் அனைத்தும் தனிச் சிங்களத்திலேயே நடைபெறுகின்றன. குறிப்பாக தமிழ், முஸ்லிம் பாடசாலைகளுக்கு அனுப்பப்படும் சுற்றறிக்கைகள், அறிவித்தல்கள் அனைத்தும் சிங்கள மொழியிலேயே ...

தமிழ் மொழியிலும் இடம்பெறுவதற்கான வேலைத் திட்டம் ஒன்றை வகுத்து செயல்படுத்தும் பொறுப்பை திரு லலித் அத்துலத் முதலி, ராஜாங்க அமைச்சர் திருமதி புலேந்திரனிடம் ஒப்படைத்துள்ளார்.

அடுத்த சில தினங்களில் கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகளுடன் கூடி இதனை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என ராஜாங்க அமைச்சர் கூறினார்.

(ந-ய)

## உல்லாச பயண அமைச்சு இடம் மாறுகிறது

கொழும்பு, ஏப்- 4

கொழும்பு கோட்டையில் இயங்கி வந்த உல்லாசப் பயணத்துறை அமைச்சு இடம் மாறுகிறது.

புடைவை, கிராமத் தொழிற்துறை அபிவிருத்தி அமைச்சராக இருந்த திரு எஸ் தொண்டமான் இப்போது உல்லாசப் பயணத்துறை, கிராமத் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சராகி உள்ளார்.

இதனால் கிராமிய தொழில் துறை அபிவிருத்தி அமைச்சு அமைந்துள்ள கொள்ளுப்பிட்டி கட்டிடத்திற்கு உல்லாசப் பயணத் துறை அமைச்சு இடம் மாறுகிறது.

*

கொழும்பு, ஏப்- 4


கைத்தொழில் ராஜாங்க அமைச்சு இனிமேல் ஒட்டுப் பலகை கூட்டுத்தாபன கட்டிடத்தில் இயங்கும். இதற்கான ...

## சுகாதார அமைச்சின் ஆலோசகராக கோதாகொட

கொழும்பு, ஏப்- 4

கொழும்பு வைத்திய பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் நந்ததாச கோதாகொட சுகாதார அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

(ந-ர)



## யாழ் விவேகானந்த சபை பரிசளிப்பு

யாழ்ப்பாணம் விவேகானந்த சபையின் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவுக் கட்டுரைப் போட்டி பரிசளிப்பு விழாவின் போது எடுத்த படம். பரிசில்களை வழங்கிய யாழ் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி பி பெரியதம்பி உரையாற்றுவதையும், விழாவுக்குத் தலைமை வகித்த சபைக் காப்பாளரும், யாழ் மாவட்ட நீதிபதியுமான திரு பொ பாலவடிவேல், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், பரிசளிப்பதற்கு தங்கப் பதக்கங்களை அன்பளிப்புச் செய்த திருமதி ஆ சு நடராசா முதலானோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

(உ)

## அமைச்சர்கள், எம். பிக்கள் வெளிநாட்டு பயணம் பற்றி வழிகாட்டு விதிகள் தயாரிக்க குழு நியமனம்

கொழும்பு, ஏப்- 4

அமைச்சர்களுக்கும் ஆளுங் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வெளிநாட்டு பயணங்களை மேற்கொள்ள வசதியளிக்கும் வகையில் அமைந்த வழிகாட்டு விதிகளின் கோவை ஒன்றைத் தயாரிப்பதற்கு பிரதமர் திரு டி பி விஜேதுங்கவின் தலைமையில் கல்வி உயர் கல்வி அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி கைத்தொழில் விஞ்ஞான தொழில் நுட்பவியல் அமைச்சர் திரு ரணில் விக்கிரமசிங்க சுற்றாடல் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் திரு எம் வின்சன்ற் பெரேரா ஆகியோர் அடங்கிய குழு ஒன்றை ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச நியமித்துள்ளார்.

இவ்வழிகாட்டு விதிகள் உத்தியோகபூர்வ மற்றும் தனிப்பட்ட என இரு வகைப்பட்ட வெளிநாட்டுப் பயணங்களுக்கும் ஏற்புடையவாகும். நாட்டுக்கு நன்மை பயக்கும் விடயங்களுக்கு மாத்திரம் உத்தியோகபூர்வமான பயணங்களைக் கட்டுப்படுத்துவது இவ்வழிகாட்டு விதிகளின் நோக்கமாகும். ஒரு வாரத்திற்குள் வழிகாட்டு விதிக் கோவையின் நகல் பிரதியைச் சமர்ப்பிக்குமாறு அக்குழுவிடம் கேட்கப்பட்டுள்ளது.

பொதுமக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் தலையாய கடமை பொதுமக்களுக்கு சேவை புரிவதாகுமெனவும் அடிக்கடி வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளல் அல்லவெனவும் இக்குழுவினை ... நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொது மக்களது தேவைகளைக் கவனிப்பதிலும் அபிவிருத்தித் திட்டங்களில் பங்குபற்றுவதிலும் கூடுதலான காலத்தைக் கழிக்க வேண்டுமென ஜனாதிபதி எண்ணுகிறார்!

வழக்கமுறைக்கு உட்பட்ட மாநாடுகளிலும் கூட்டங்களிலும் பங்குபற்றுவதற்குக் கடல் கடந்த நாடுகளில் இப்பொழுது மீளமைப்பு செய்யப்பட்டுள்ள இலங்கைத் தூதரகங்களைப் பயன்படுத்திக் கொள்வதன் வாயிலாக வெளிநாட்டுப் பயணங்களை குறைத்துக் கொள்ளலாமென்று ஜனாதிபதி சுட்டிக் காட்டியுள்ளார்.

[ந—ய]

## பரீட்சையில் ஆள் மாறாட்டம் செய்தோர் தடுத்து வைப்பு

கொழும்பு, ஏப்- 4

மட்டக்களப்பு, கல்முனை பிரதேசத்தில் ஜீ சி ஈ சாதாரண தரப் பரீட்சையில் ஆள்மாறாட்டம் செய்த சுமார் 20 பேரை புலிகள் இயக்கத்தினர் தடுத்து வைத்தனர்.

மேற்படி பரீட்சையில் ஆள் மாறாட்டம் செய்யவோ, அன்றி எதுவித முறைகேடான நடவடிக்கைகளில் ஈடுபடவோ கூடாது என புலிகள் பகிரங்க எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

இதனை மீறி செயற்பட்டமைக்காகவே இவர்களை தடுத்து வைத்தாகவும், பின்னர் அவர் ...

## பத்திரிகைகளில் செய்திகளை பிரசுரிப்பதில் தணிக்கை ...

## 'மஹஜன சம்பத'

கம்பளை, ஏப்- 4

நேற்று முன் தினம் கொழும்பில் இழுக்கப்பட்ட 290ஆவது "மஹஜன சம்பத" சுவீப் சீட்டிழுப்பின் முடிவுகள் ...

கைகள், அறிவித்தல்கள் அனைத்தும சிங்கள மொழியிலேயே அனுப்பி வைக்கப்படுகின்றன.

இது தொடர்பாக பல முறைப்பாடுகள் கல்வி அமைச்சுக்கு கிடைத்துள்ள போதிலும் அது பற்றி எவ்விதமான நடவடிக்கையும எடுக்கப்படவில்லை.

எனவே இவ்விடயம தொடர்பாக பரிசிலனை செய்து கல்வி அமைச்சின் சகல கருமங்களும

பலகை கூட்டுத்தாபன கட்டிடத்தில் இயங்கும. இதற்கான நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பௌத்தாலோக மாவத்தையில் உள்ள தனது அமைச்சின் நடவடிக்கைகளை அமைச்சர் திரு எம எஸ் செல்லச்சாமி இன்று வியாழன் காலையில் ஆரம்பித்து வைப்பார்.

(ந-கு)

# நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கிக்கும வர்த்தக வங்கிக்கும் இடையிலான உடன் மாற்று விகிதம 1990 ஏப்ரல் 3 இல்.

| | | | | |
|---|---|---|---|---|
| 100 அமெரிக்க டாலர் | ரூ | 3998-50 | ரூ | 4001-50 |

வர்த்தக வங்கிகள் வழங்கும தந்தி மூல பிறநாட்டு நாணய உடன் மாற்று விகிதம- 1990 ஏப்ரல் 3 இல்.

| | | வாங்குதல் | | விற்றல் |
|---|---|---|---|---|
| 100 அமெரிக்க டாலர் | ரூ | 3997-15 | ரூ | 4002-80 |
| 100 ஸ்டேர்லிங் பவுண் | ரூ | 6520-01 | ரூ | 6550-39 |
| 100 ஜெர்மன் மார்க்ஸ் | ரூ | 2342-18 | ரூ | 2359-81 |
| 100 பிரெஞ்சு பிராங் | ரூ | 692-79 | ரூ | 705-61 |
| 100 ஜப்பான் யென் | ரூ | 25-0305 | ரூ | 25-2499 |

பாவனையாளர்களுடன் வர்த்தக வங்கிகள் தந்தி மூல பிறநாட்டு நாணய மாற்றத்தைக் கடைப் பிடிக்கும மத்திய வங்கி வாங்கும விகிதம் ஆகக் குறைந்த வாங்கும விகிதம: ஆகக் கூடிய விற்கும விகிதம:

| | | | | |
|---|---|---|---|---|
| 100 வங்காளதேச டகாஸ் | ரூ | 117-85 | ரூ | 118-28 |
| 100 [illegible] | ரூ | 610-33 | ரூ | 612-76 |
| 100 இந்திய ரூபா | ரூ | 231-27 | ரூ | 232-68 |
| 100 ஈரான் ரியால் | ரூ | 56-27 | ரூ | 56-48 |
| 100 நேபாள ரூபா | ரூ | 138-12 | ரூ | 138-70 |
| 100 பாகிஸ்தான் ரூபா | ரூ | 185-37 | ரூ | 186-14 |

இப்பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டது இன்டிபென்டன்ட் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் 5 குணசேன மாவத்தை கொழும்பு 12. [illegible] 1613 வெளியிட்ட திகதி 5 ஏப்ரல் 1990

DINAPATHI, Gunasena Mawatha, Colombo — 12

P. O Box 1613

## பிரசுரிப்பதில் கவனம் தேவை

### — ஜனாதிபதி செயலகம்

சில செய்தித் தாள்கள் அமைச்சரவைக் குழுக்கூட்ட மந்திராலோசனைகளில் இருந்து பெறப்பட்டவை எனத் தோன்றும தகவல்களை பிரசுரித்து வருகின்றன என்பதை ஜனாதிபதி செயலகம மன வருத்தத்துடன் குறிப்பிட விரும்புகிறது- வகுப்பீட்டுத் தகவல்களின்பாற்படும இச் செய்திகளை பிரசுரிப்பது சட்டத்தால் தடுக்கப்பட்டுள்ளது-

இப்படி ஜனாதிபதி செயலகம விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது-

அறிக்கையில் மேலும குறிப்பிடப்பட்டுள்ளதாவது—

இச் செய்திகளை பிரசுரிப்பவர்கள் அனைவருக்கும எதிராகப் பொருத்தமான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும எனத் தீர்மானம எடுக்கப்பட்டுள்ளது!

ஜனாதிபதியோடும அமைச்சர்களோடும தொடர்பு கொண்ட ஏனைய முக்கிய குழுக் கூட்டங்களினதும் பேச்சுவார்த்தைகளின் அறிக்கைகளை வெளியிடும பொழுது அச் செய்திகளின் உண்மை நிலையினையும நம பத்தகுந்த நிலையினையும ஆய்ந்து அறிதல் வேண்டும-

வெகுசன ஊடகங்களுக்கும் அரசுக்கும இடையில் நல்லெண்ண அடிப்படையில் அமைந்த செயல் உறவு பேணப்படுதல் வேண்டும-

முக்கியமான அரசாங்க தீர்மானங்களைக் குறித்த சரியான செய்திகளைத் தெரிவிக்கும நோக்கில் வாரந்தோறும பத்திரிகையாளர் மாநாடுகள் நடத்தப்பட்டு வருகின்றன-

உத்தியோகபூர்வமற்ற வழிகளால் தகவல்கள் கிடைத்த விடத்து அவற்றின் உண்மையினையும ஆதாரங்களையும தகவல்களின் உண்மையினையும ஆதாரங்களையும் தகவல் தெரிந்த வட்டாரங்களோடு தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளுதல் யாவருக்கும நலன் பயப்பதாகும-

அத்தகைய உத்தியோகபூர்வமற்ற தகவல்களின் உண்மையினை ஜனாதிபதியின் செயலாளர்களிடம அல்லது சமபந்தப்பட்ட அமைச்சுகளின் செயலாளர்களிடம விசாரித்து அறியலாம-

[ந—ய]

## பஞ்சாப்பில்

## குண்டு வெடிப்பு: 16 பேர் மரணம்

சென்னை, ஏப்- 5

பஞ்சாப்பில் நேற்று முன்தினம சக்தி வாய்ந்த குண்டொன்று வெடித்ததில் கிட்டத்தட்ட 16 பேர் உயிர் இழந்தனர் பலர் காயமுற்றனர்.

குருதாப்பூர் மாவட்டத்திலுள்ள பட்டாலா நகரத்தில் ஊர்வலம ஒன்று சென்று கொண்டிருந்த போதே இக்குண்டு வெடித்துள்ளது.

இந்தச் சம்பவத்தை அடுத்து அந்த நகரத்தில் ஊரடங்குச் சட்டம பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. பாதுகாப்புப் படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

[ந-கு]

இழுக்கப்பட்ட 250ஆவது "மஹஜன சமபத" சுவீப் சீட்டிழுப்பின் முடிவுகள் வருமாறு—

வெற்றி பெற்ற எண்

**358620**

(ந)

பயணங்களை மேற்கொள்ளல் அல்லவெனவும இக்குழுவினை நியமிக்கும போது ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்-

நாட்டில் எல்லாப் பகுதிகளிலும அமைதியும சகஜ நிலையும ஏற்பட்டுள்ளபடியால்

காகவே இவர்களை தடுத்து வைத்ததாகவும, பின்னர் அவர்கள் எச்சரிக்கை செய்து விடுவிக்கப்பட்டதாகவும மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட பொலிஸின் ஆசிரியல் பொறுப்பாளர் திரு கரிகாலன் தெரிவித்தார் (ந-404)

இப்பொழுது பெறலாம்!


குணசேன

ஆங்கில-தமிழ்

சுருக்க அகராதி

ஆக்கியோன் - எஸ் நடராசா

விலை ரூ. 190.00




பாடசாலை மாணவர்களுக்கும் காரியாலயப் பயன்பாட்டுக்கும் மிகச் சிறந்த அகராதி உங்கள் தேவைக்கு உடனே எழுதுங்கள் அல்லது நேரில் வாருங்கள்

எம். டி. குணசேன

அன்ட். கம். லிமிட்.

217- ஒல்கொட் மாவத்தை

கொழும்பு—11

கிளைகள்— கொள்ளுப்பிட்டிய- களுத்துறை- காலி- மாத்தறை- கண்டி- குருநாகல்- நீர்கொழும்பு

புகையிரத புத்தகசாலை— மருதானை- பொல்காவலை- கண்டி- காலி- மாத்தறை- அனுராதபுரம்